தனிச்சுற்றுக்கு மட்டும்

# மாயோனி

மாத இதழ்

## அன்பின் மொழி

மலர்-1 இதழ்-1 மே-சித்திரை-2026 நன்கொடை-50




MAAYONI GNANAOLI PEEDAM
A Space for Inner Peace, Healing & Transformation
7/2, VASU LANE, KILPAUK, CHENNAI – 600010 & PAPPAMPATTI, COIMBATORE - 641016
Step Into a Healthier, Happier You
Guidance for Mind, Body & Soul
Yoga
Meditation
Divine Healing
Natural Lifestyle Diet
Healing Music
www.Maayoni.com
For Booking & Enquiries: 9047346777 | 9025848758
Reconnect. Heal. Transform.

# மாயோனி

தனிச்சுற்றுக்கு மட்டும் அன்பின் மொழி

மாத இதழ்

மலர்-1 இதழ்-1

மே-சித்திரை-2026 நன்கொடை-50



ஆசிரியர்

**ஆதிசக்தி மாயோனி**

ஆசிரியர்குழு

சு. இராமமூர்த்தி,
பேரா நா.கணேசன்,
முனைவர் இரா.கிருஷ்ணபாரதி
பிருந்தா, பிரசன்னா

ஆலோசனைக்குழு

ப.கோவிந்தராஜ், தீபா,
மேன்மை மணி



**அலுவலகம் முகவரி**

**மாயோனி ஞானவொளி பீடம்**
7/2. முதல்தளம், வாசுதெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை -600010.
தொடர்புக்கு: 9025848758.
email: maayonimagazine@gmail.com


## அன்பேமொழி! ஞானமேவழி!

மனிதர்களின் மாண்பைப் பேணி வளர்க்கும்
அன்பின் மொழியை
அன்பின் சாரத்தை
அன்பின் தத்துவத்தை

மாயோனி ஞானவொளி பீடம் அனைவருக்கும் எடுத்துரைத்து வருகிறது.

இந்த உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவான அறம் அன்பு. அதனை அனைவரும் பாதுகாத்து ஒவ்வொரும் அதனை மற்றவர்களுக்குத் தரவேண்டும்.

அதற்கு மிகுந்த பொறுமையும் பொறுப்பும் வேண்டும். அதற்குத் தியானம், யோகம் சிறந்த வழிகளாக வாயில்களாக அமையும்.

மாயோனி மாத இதழும் அன்பின் மொழி பேசி உங்கள் அனைவரிடமும் வருகிறது. அனைவரும் அதனுடன் இணைந்து கொள்ளுங்கள்.

பெருமகிழ்ச்சி அடையுங்கள்.

அன்புடன்
ஆசிரியர்

# மாந்தர்களின் மனசாட்சி



# தெருக்கூத்து

**சாரதி கிருஷ்ணன்**
கூத்துக்கலைஞர், பயிற்றுநர். முகமூடிகள் நாடக இயக்கம்

தமிழகத்தின் தொன்மையான அரங்க வடிவங்களில் ஒன்றான தெருக்கூத்து முழுமையான அரங்க வடிவம் ஆகும். அதாவது இசை, பிரதி, ஒப்பனை, நடிகர்கள் என எல்லாவற்றையும் உள்ளடக்கிய வடிவமாகும். வட மாவட்டங்களில் செல்வாக்குப் பெற்றுள்ள தெருக்கூத்து வெறும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாது சடங்கோடு பிணைந்து, இன்றுவரை நிகழ்த்தப்பட்டு வருகிறது. கூத்து என்ற சொல் சங்கஇலக்கியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ளன. ஆனால் இந்தக் கூத்துதான் அதுவா? என்ற கேள்வி எழுகின்றது. நிகழ்த்தப்படும் இடமான தெரு முன்னொட்டாக வைத்து அழைக்கப்படும் தெருக்கூத்துக் கலைஞர்களின் வழி குறைந்தது 300 ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கின்றது.

தெருக்கூத்தை நிகழ்த்தப்படும் முறையை வைத்து மூன்றாகப் பிரிக்கலாம்

* **வடக்கத்தி பாணி** (காஞ்சிபுரம், செய்யார், திருவண்ணாமலை)
* **தெற்கத்தி பாணி** (திண்டிவனம், பாண்டிச்சேரி, கடலூர்)
* **மேற்கத்தி பாணி** (சேலம், தர்மபுரி)

## தெருக்கூத்தின் பொதுவான அம்சங்கள்

மூன்று பாணிகள் கொண்ட தெருக்கூத்து பொதுவான சில அம்சங்களைப் பெற்று இயங்குகின்றது.

## கட்டியக்காரன்

கதையைப் பார்வையாளர்களுக்கு விளக்கும் வண்ணம் கட்டியக்காரன் பாத்திரம் எல்லா தெருக்கூத்து வகைலும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் காலங்களில் தெருக்கூத்து வாத்தியார்களே இப்பாத்திரங்களை ஏற்று நடித்து வந்துள்ளனர். இப்போது நகைச்சுவைத்திறன் கொண்ட நபர்கள் கதையை முழுமையாகத் தெரிந்த நபர்கள் நிகழ்த்தி வருகின்றனர். கதாபாத்திரங்களைஅறிமுகம் செய்யும் வேலையும் கட்டியக்காரன் பாத்திரத்தின் சிறப்பு அம்சமாகும் மூன்று பாணிகளிலும் கட்டியக்காரன் கதாபாத்திரம் இடம் பெற்றுள்ளது சிறப்பாகும் .

## மகாபாரதக் கதைகள்

கிராமப்புறங்களில் திரெளபதி அம்மன் கோயிலுக்காக வருடா வருடம் அல்லது மூன்று வருடத்திற்கு ஒருமுறை எனப் பத்து நாட்கள் பாரதக்கூத்து நடைபெறும். அதில் பத்து நாட்கள் தெருக்கூத்து கலைஞர்கள் அவ்ஊரிலேயே தங்கி நிகழ்த்துவர். பத்து நாட்களும் மகாபாரதக் கதைகளை நிகழ்த்துவர். மூன்று பாணிகளிலும் பாரதக்கதைகள் நிகழ்த்துவது என்பது பொதுவான பண்பாக இருக்கிறது. வெறும் பொழுதுபோக்காக மட்டுமல்லாது சடங்குகளிலும் கூத்து இணைந்திருக்கும். உதாரணமாக வில்வளைணபு, பாஞ்சாலி சபதம், அர்சுணன் தபசு, மாடுபிடி சண்டை, அரவான் களப்பலி, துரியன் படுகளம் போன்ற சடங்கு சார்ந்த கதைகள் நிகழ்த்தப்படும். இச்சடங்குகளில் பார்வையாளர்களும் ஒரு அங்கமாக கலந்து கொள்வார்கள். சடங்கோடு இணைந்திருப்பதால் திரெளபதி அம்மன் திருவிழாக்காலங்களில் கட்டாயமாகத் தெருக்கூத்து நிகழ்த்தப்படும் நிலை உள்ளது. இச்சடங்குகள் இருப்பதாலேயே இன்றுவரை கூத்துக் கலை உயிரோட்டமாக இருக்கின்றது.

## துரியன் படுகளம்

திரெளபதி அம்மன் கோயில் திருவிழாவின் இறுதிச்சடங்கான துரியன் படுகளம் நிகழ்வில் பெரிய துரியன் சிலை செய்யப்பட்டு அதன் தொடைப்பகுதியில் சிதைத்து துரியன் உயிரை எடுத்து திரெளபதி கூந்தல் முடிப்பதாக நிகழ்த்தப்படும் சடங்கில் ஊர் மக்களும், திரெளபதி அம்மனை வழிபடும் மக்களும் வெற்றி அடைந்ததாக நினைத்து இச்சடங்கில் கலந்துகொள்வர். இதுவும் மூன்று பாணிகளிலும் இருக்கும் பொதுவான அம்சமாகும்.கூடுதலாகத் தஞ்சாவூர் பகுதிகளிலும் இந்தத் திரௌபதி அம்மன் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.



## இறப்புச் சடங்குகளிலும் தெருக்கூத்து

கோயில் சார்ந்த வழிபாட்டோடு இணைந்தது மட்டுமல்லாது தனிநபர் சடங்கான இறந்தவரின் பதினாறாம் நாள் நடப்பு நிகழ்விலும் தெருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

கர்ணமோட்சம், வாலி மோட்சம் போன்ற கதைகள் நிகழ்த்தப் படுகின்றன. உதாரணமாக கர்ணன் இறக்கும் தருவாயில் தன்னுடைய நல்ல குணங்களை எல்லாம் கிருஷ்ணரிடம் தாரை வார்த்துக் கொடுப்பதாகக் கதை நிகழ்த்தப்படும். இதில் கர்ணன் தன்னோடு சேர்ந்து இறந்தவரின் பெயரைக் குறிப்பிட்டு அன்னாரும் சொர்க்கலோகம் சேர வேண்டும் என்பதாக நிகழ்த்தப்படும். கர்ணனோடு சாதாரண மனிதனின் நற்பண்புகளும் சேர்த்து நிகழ்த்தப்படுவதால் தெருக்கூத்து பெரும்பாலும் இறந்தவர்களுக்காக நிகழ்த்தப்படுகின்றன. மூன்று பாணிகளிலும் மோட்சக்கதைகள் நிகழ்த்தப்படுகின்றன.

## இசைக்கருவிகள்

ஆர்மோனியம், முகவீணை, மிருதங்கம், தாளம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத் தப்படுகின்றன. இரவு முழுவதும் எல்லாப் பாணிகளிலும் வாசிக்கப் படுகின்றன. எல்லா சமூகத்தைச் சேர்ந்தக் கலைஞர்களும் இந்த இசைக்கருவிகளை வாசிக்கின்றனர்

## ஒப்பனை

எல்லாப் பாணிகளிலும் ஒப்பனைக் கலைஞர்களே வரைந்து கொள்கின்றனர். ஒப்பனைக் கதாபாத்திரத்திற்கேற்ப பயன்படுத்தப்படும்.

## கூத்து வாத்தியார்கள்

எல்லாப்பகுதி தெருக்கூத்துகளும் கூத்து வாத்தியார்கள் வழிக்கற்றுத் தரப்படுகிறது. அந்த வாத்தியாரின் பாடல்கள், அடவுகள், நிகழ்த்தும் முறையைக் கலைஞர்கள் பின்பற்றுகிறார்கள். தெருக் கூத்து வரலாற்றை அறிந்துக் கொள்ள வாத்தியார்கள் முக்கியமான தரவாக அமைகின்றனர். மூன்று பாணிகளும் வாத்தியார்கள் வழிக் கற்றல் முறையே நடைமுறையில் உள்ளது.



## பெண் கதாபாத்திரங்கள்

பெண் கதாபாத்திரங்களை பெரும்பாலும் ஆண்கள் நிகழ்த்தும் முறையே நடைமுறையில் உள்ளது. சில பகுதிகளில் பெண்கள், திரு நங்கைகள் நிகழ்த்துகின்றனர். இன்னும் சில கதாபாத்திரங்கள் நிகழ்த்துவோர், விரதம் இருந்து வேடமணிந்து நிகழ்த்தும் முறையும் உள்ளது. பெண் பாத்திரங்கள் தெருக்கூத்தில் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றன. எல்லாப் பாணிகளிலும் பெண்பாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

## கலைஞர்கள்

தெருக்கூத்துக் கலைஞர்களில் எல்லாச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் இருக்கின்றனர். உதாரணமாக வன்னியர், வண்ணார், நாவிதர், அருந்ததியர், ஆதிதிராவிடர் போன்ற சமூகத்தவர்கள் நிகழ்த்துகின்றனர். முழு நேரக்கலைஞர்களாகவும் சிலர் விவசாய வேலையோடு சேர்ந்து தெருக்கூத்து நிகழ்த்துபவராகவும் இருக்கின்றனர்.

தெருக்கூத்தினைப் பார்த்து வளர்ந் தவர்கள் ஆர்வத்தில் தானும் கற்றுக் கலைஞர்களாக மாறுபவர்களும், பரம் பரையாகக் கற்றுக் கொள்பவர்களும் கலைஞர்களாக உள்ளனர். முடிவாக தெருக்கூத்து வெறும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் இருந்திருந்தால் இன்று வரை உயிர்ப்புடன் இருந்தி ருக்குமா என்றால் நிச்சயம் வாய்ப் பில்லை.

இக்கலை சடங்குடன் பிணைந்து இருப்பதால் இன்றுவரை இருக்கின்றது. இச்சடங்குகள் இருக்கும் வரை தெருக்கூத்தும் இருக்கும். கிராமப் புறங்களில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஆறு குழுக்கள் இருந்தன என்றால் தற்போது அறுபது குழுக்கள் இயங்குகின்றன. இது வளர்ச்சி தானே? நகர்ப்புறங்களில் தெருக்கூத்து பொழுது போக்கிற்காக எப்போதாவது ஒருமுறை நிகழ்த்தப்படுவதை வைத்தும்,சி னிமா வளர்ந்ததால் தெருக்கூத்து அழிந்துவிட்டது என்ற கருத்தும் உண்மையில்லை. தெருக்கூத்து தனக்கான இடத்தில் செல்வாக்குடன் இயங்குகின்றது. தலைமுறைகளைக் கடந்து அவை வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. இருக்கும் •



# குழந்தைகளிடம் கண்களால் கூட கோபப்படக்கூடாது




ரெஜியா
குழந்தைகள் வளர்ப்பு நல ஆலோசகர்,
லண்டன்

குழந்தை வளர்ப்பு என்பது மிகமிகப் பொறுப்பான பணி. பணிகளிலே மிகவும் கவனமாக செய்ய வேண்டிய பணி அது. அன்பு, பாதுகாப்பு, ஊட்டச்சத்து, ஒழுக்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் குழந்தை வளர்ப்பு என்பது அமைய வேண்டும். அதற்கு நிறைய சகிப்புத்தன்மை வேண்டும்.

பொறுமையும் சகிப்புத்தன்மையும் இல்லாவிட்டால் குழந்தையின் குழந்தைத் தன்மையும் வளர்ப்பவர்களின் மனிதத் தன்மையும் கேள்விக்குறியாகும்.

குழந்தைகளை யார் வளர்க் கிறார்களோயாரிடம் வளர்கிறார்களோ அவர்களுடைய ஆளுமை தான் அந்தக் குழந்தையிடம் அதிகம் காணப்படும்.




குழந்தை வளர்ப்பது பெற்றோராக இருந்தாலும் சரி அத்தை, மாமி, தாதி, சித்தி, தாத்தா, பாட்டி என யார் வளர்த்தாலும் யாரிடம் குழந்தைகள் அதிக நேரம் இருக்கின்றனவோ அவர்களின் ஆளுமை தான் குழந்தையின் மனதில் ஆழமாகப் பதிந்து கொள்ளும்.

யார் எந்தத் தொனியில் பேசு கிறார்கள் எந்த உடல் மொழியில் பேசுகிறார்கள் என்ன செய்தியைப் பேசுகிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் மிக அழகாக கவனமாக குழந்தைகள் புரிந்து கொள்வார்கள். குழந்தைகளுக்கு எதுவும் தெரியாது சிறுபிள்ளைகள் என்று வளர்ப்பவர்கள் எண்ணிவிடக்கூடாது. குழந்தைகளுக்கு அதை வெளிப் படுத்தக்கூடிய ஆற்றல் அந்த சக்தி குறைவாக இருக்குமே தவிர அனைத்தையும் புரிந்து கொள்ளும்.

மூன்று வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை, அறக்கருத்துக்களை, ஒழுக்கமான குணங்களை, தூய்மையான பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்து விட முடியும். எளிமையாக அவர்கள் செய்கின்ற வண்ணம் அன்பாகச் சொல்கின்ற போது கண்டிப்பாக அவர்கள் செய்வார்கள். சொல்லிக் கொடுப்பவர்கள் அதேபோன்று செய்து காட்ட வேண்டும். குழந்தைகள் போலச் செய்தலை மிக எளிதாகக் கற்றுக் கொள்ளும். எதையும் செய்யவில்லை என்று அடம் பிடிக்கும் குழந்தைகளிடம் நாம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் பொறுமையாக இருக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகள் என்ன என்பதை கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும். அதை விடுத்து அவர்களிடத்தில் கோபமாகப் பேசி விடக்கூடாது.அடித்தல் கூடவே கூடாது. கண்களை உருட்டி எந்தப் பாவனையாலும் குழந்தைகளை மிரட்டி விடக்கூடாது.

பெற்றோர்கள் செய்ய வேண்டியது வன்முறை அற்ற குடும்பங்களை உருவாக்குவது. குழந்தைகள் முன்பு வன்முறையைத் தூண்டும் வகையில் பேசுவதோ செயல்படுவதோ கூடாது. வன்முறையற்ற சூழலில் வளரும் குழந்தைகளின் மனம், உடல், அறிவு ஆகியவை சிறப்பாக அமையும்.

அமைதியான அன்பான சூழலில் வளரும் குழந்தைகளின் எதிர்காலம் மிகச்சிறப்பாக அமையும் •





# அன்பே மொழி!

ஆதிசக்தி மாயோனி

உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும் இணைக்கின்ற ஒரு மையப்புள்ளி தான் அன்பு. அன்பைச் சுற்றியே இந்த உலகம் சுழன்று கொண்டுள்ளது அந்த சுழற்சியே இயக்கம். இந்த உலகில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கின்ற பேரியக்கம். எந்தவொரு சூழ்நிலையிலும் அந்தச் சுழற்சியானது அறுபட்டுப் போவதில்லை. விடுபட்டுப் போவதில்லை. எந்த உயிரினமும் அந்த சுழற்சியை விட்டு வெளியேறவோ தன்னை அந்தப் பாதையிலிருந்து விலக்கித்தனிமைப்படுத்திக் கொள்ளவோ இயலாது.

அனைத்து உயிர்களின் தொடக்கமும் முடிவும் அன்பின்றி நடப்பதில்லை. அன்பின் இணைப்புகளும் அதற்குள் உண்டாகும் முரண்களும் இணைந்து இந்தச் சுழற்சியை நிற்காமல் காலம் காலமாக எடுத்துச் சென்று கொண்டுள்ளன.

ஓர் உயிரின் வாழ்க்கைப் பயண மானது தாயிடம் தொடங்கி , தாயின் அரவணைப்பில் பாதுகாப்பாகி, தாயின் மொழியால் இவ்வுலகை அறிந்து புரிந்து ,ஏனைய மக்களோடு கலந்து பழகி, தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அந்தந்த வயதில் கற்றுத் தேருகின்றபோது, அந்த ஒவ்வொரு படிநிலையிலும் சக மனிதர்களை எப்படி மதிக்கப் பழகுகிறார்கள். எப்படி அன்பு காட்டுகிறார்கள்.

அதன்பின் எப்படி நண்பர்கள் வட்டாரத்திலும் உறவினர்களுக்கு நடுவிலும் நம்பிக்கைக்கு உரிய மனிதர்களாக மாறுகிறார்கள் என்பதில் தான் மனிதத் தன்மையின் சாரம் அடங்கியுள்ளது.

ஆணோ பெண்ணோ இருவரின் ஆளுமையும் அதில் தான் அடங்கி யிருக்கிறது. பிற உயிர்கள் மீது அன்பு செலுத்துவது என்பது மிகுந்த மேன்மையான குணம். அது மிகப்பெரிய பொறுப்பான குணம். தன்னைப் போல பிறரையும் நினைக்கும் அரிய குணம். அந்தக் குணம் வாய்க்கபெற்றவர்கள் பாக்கியசாலிகள். அன்பான மனிதர்கள் பிறருடைய குறைகளைப் பற்றி பேசுவதில்லை.

யாரைப் பற்றியேனும் எப்போதும் பேசிக் கொண்டிருப்பவர்கள். அந்தப் பேச்சின் நோக்கத்தை உற்று கவனித்தோமானால் அதில் முழுக்க மற்றவர்களைப் பற்றிய குறைகளை மட்டுமே பேசிக் கொள்வார்கள். அந்தக் குறை பேசும் மனிதர்களால் மனிதர்கள் மீது மட்டுமல்ல எந்த உயிரினங்களின் மீதும் அன்பைச் செலுத்த முடியாது. ஒரு காக்கா குருவிக்கூட தானியங்களையோ தாகத்திற்கு நீரையோ கூட வைக்கத் தெரியாத அளவில் அன்பற்றவர்களாக இருப்பார்கள்.

அதுவும் ஆயிரம் நன்மைகள் கண் முன் இருந்தாலும் கூட அந்த நன்மைகளை ஒருபோதும் மதிக்கத் தெரியாதவர்களாக இருப்பார்கள். அந்த



நன்மை செய்தவர்களை பாராட்டவும் மாட்டார்கள். அவற்றையெல்லாம் துச்சம் என மதித்து மிக இலகுவாகக் கடந்து விடுவார்கள்.

அன்பற்ற மனிதர்களால் இந்தச் சமூகத்தில் அனைவருடனும் இணைந்து இணக்கமாக வாழ இயலாது. அதற்கான காரணம் என்னவென்றால் அனைத்தையும் தனக்கே வேண்டும் என்றும் தனக்கே உரிமை என்றும் நினைத்துக் கொள்வது தான் காரணம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரிய பிறர்க்கு

என்று வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கூறியுள்ளார்.

அன்பின் தன்மையை உள் வாங்கியவர்கள் அவர்களுடைய செயல், சிந்தனை, வாழ்க்கை என அனைத்தையும் பிறருக்காகத் தியாகம் செய்வதற்குத் தயாராக இருப்பவர்கள் .

தான் இந்த உலகை விட்டுக் கடந்த பின்பும் கூட அந்த உடலில் உள்ள எலும்பும் மற்றவர்களுக்கு பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படக் கூடியவர்கள் என்கிறார்.

## அன்பின் மலர்ச்சி

மனிதர்களிடத்தில் இருக்கின்ற மிகப்பெரிய ஆயுதம் அன்பு. அது எல்லோரிடத்திலும் இருக்கின்றது எல்லோருக்கும் தேவைப்படும் ஒன்றாகவும் இருக்கின்றது எளிமையாகப் பயன்படுத்தக்கூடிய ஒன்றாகவும் இருக்கின்றது. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்தத் தடையும் இன்றி அன்பை வெளிப்படுத்த முடியும்.

அன்பின் சக்தி என்பது அதை வெளிப்படுத்தும் போதுதான் பரிணமிக்கின்றது.

அன்பிற்கு ஆயிரம் கைகள். கோடிக்கால்கள். வரையறை கூற இயலாத மாய பிம்பம் தான் அன்பு, அது மனதின் அதிர்வு. அது கவனிப்பிலும் கருணையிலும் வெளிப்படும் மனதின் தேன். ஓருயிர் இன்னோர் உயிருக்குக் கொடுக்கும் அதிகபட்ச மரியாதை தான் அன்பு.

**அன்பு என்பது மனதின் எழுச்சி.**
**கருணையின் ஊற்று.**
**காவியக் கூற்று.**

மண்ணில் நிலைபெறும் அதிசயம். காலத்தின் பதிவு . கண்முன் விரியும் பேராறு.

இன்னும் இன்னும் எத்தனை கோடி விளக்கங்கள் கொடுத்தாலும் அது மேலும் ஒரு புதிய விளக்கத்தைத் தாங்கி நிற்கும். அது மனிதர்களைப் புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும்.

மனிதர்களின் மனங்களைத் திறக்கும் அதிசயமான மந்திரக் கோல்

தான் அன்பு. அன்பினால் தான் மனிதர்களின் மனம் மலருகின்றது.

மலர்ந்த மனதில் தோன்றும் எண்ணங்கள் பகிர்தலுக்கான வெளியைத் தானாக முன்வந்து ஏற்படுத்தும். மனதில் பூட்டி வைத்திருந்த அனுபவங்களை வலிகளை முதலில் முன் வைக்கும். அந்த இடம் தான் நம்பிக்கை ஒளிருமிடம். ஒளிரத் தொடங்கும்போது மனதில் உள்ள இருள் நீங்கிவிடும். மறைவுகள் பாசாங்குகள் ஏதுமற்றுப் போகும். வாழ்வில் நடக்கும் அத்தனை பதிவுகளையும் பகிர்ந்து கொள்ளத் தயாராகிவிடும்.

மனம் திறந்துவிட்ட பிறகு மனதின் அடி ஆழத்தில் சென்று அன்பின் நல்ல பதிவுகளை நல்ல சூழல்களைப் பதித்துக் கொள்கின்றது. எந்தக் காலத்திலும் எந்தச் சூழலில் நின்று நினைத்துப் பார்த்தாலும் அது மகிழ்ச்சியைத்தரும் இனிய நினைவாக மாறிவிடுகிறது •





# இசையின் மூலமாக மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை



முனைவர் கிருஷ்ணபாரதி,
இசைப் பேராசிரியர், குறிஞ்சியாழ் இசைப் பள்ளி,
கீழ்ப்பாக்கம், சென்னை.

நமது பாரம்பரியத் தமிழ் மரபில் இசை என்பது வாழ்வில் இன்றியமையாத இடத்தினைப் பிடித்துள்ளது. ஆதி மனிதன் தோன்றியது முதல் நாடோடிகளக திரிந்து, இடம்பெயர்ந்து இன்று வரைக்கும் இசைக்கான முக்கியத்துவம் இம்மியளவும் குறையவில்லை. இன்றைய உலகம் கல்வியின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளைக் காண்பதும், கண்டுபிடிப்புகள் கல்வியை நவீனப்படுத்துவதும் சங்கிலி போல் தொடர்ந்து வருகின்றது. அதிலே நமது பாரம்பரியமிக்க இசையின் மூலம் கல்வியை எளிமைப்படுத்துவது எப்படி என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## முதன்மையும் முடிவுமான இசை


எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் தொடக்கத்தில் இறைவணக்கம் அல்லது தமிழ்த்தாய் வாழ்த்து நிகழ்ச்சியின் முடிவில் ஏதேனும் ஒரு பாடல் கல்லூரி ,அரசு அலுவலக நிகழ்ச்சியாக இருந்தால் தேசியகீதம் பாடி முடிக்கின்றோம். இவ்வாறு தொடக்கத்திலும் இசை முடிவிலும் இசை அதேபோல ஒரு மனிதன் பிறந்தது முதல் இறுதி வரை அவனது வாழ்வில் இசை இடம் பெறுகின்றது. பிறந்தவுடன் தாலாட்டு, வள்ளைப்பாட்டு, விளையாட்டுப் பாடல் எனத் தொடங்கி இறுதியில் ஒப்பாரி வரைக்கும் பாடல்கள் வாழ்க்கையில் இடம்பெறுகின்றது.

## ஆட்டிசத்தால் பாதித்த குழந்தைகளுக்குக் கற்பிக்கும்முறை

கற்றல் திறன் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு மிக எளிதாக இசையின் வாயிலாகக் கற்றுக் கொடுக்கலாம்.

கற்றல் திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்குச் சிறப்பான ஒலி முறைகளைக் கேட்கும் திறன் அதிகமாக இருக்கும். அதனால் ராகங்கள் வெவ்வேறு விதமான ஒலிப்பு முறைகளைக் கொண்டுள்ளதால் அந்த மாணவர்களுக்கு மிக எளிதில் புரிகின்ற வண்ணம் கற்றுக் கொடுக்க முடியும்.

பொதுவாகவே பாடல் கற்கும் முறை என்பது மீண்டும் மீண்டும் கற்று மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து பழகவேண்டியமுறை.



இசையை மற்ற பாடங்களைப் படிப்பது போன்று ஒரே முறை படித்து புரிந்து கொள்ள இயலாது. ஒன்றுக்குப்பல நூறு முறை இசையைக்கேட்டுப் பாடிப் பயிற்சி செய்தால் மட்டுமே இசையை முழுமையாக கற்க முடியும்.

இந்த முறை கற்றல் திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இருப்பதனால் இசையின் வாயிலாக அந்த மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பது மிக எளிதாக இருக்கும்.

ஒருவருக்கு விழிப்புணர்வு கொடுப்பதற்குப் பாடல்களால் தான் கொடுக்க முடியும் தேச பக்திப் பாடல்களை கேட்கும்போது தேச ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. ஆங்கிலேயரால் நாம் அடிமைப்பட்டு இருந்தபோது நாடகம் போன்ற வெகுஜன ஊடகத்தின் **(mass media)** மூலமாக இசைப் பாடல்களின் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் முழுவதுமாக மாறினர்.அவர்களது உணர்வில் ஒற்றுமை ஏற்பட்டு விடுதலைக்குப் போராடும் நிலைக்கு வந்தனர். இவ்வாறு உணர்வுகளைத்தட்டி எழுப்ப இசை முக்கியப் பங்கு வகித்தது.

## பண்களின் தன்மை

ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தன்மை உண்டு. நம் முன்னோர்கள் அதை அறிந்து அவற்றுக் குரிய நேரத்தில் அவற்றைப் பாடிப் பயனடைந்துள்ளனர். அதன்படி மங்கையர்க்கரசி தேவாரம் இதனைக் காலையில் கேட்கும் போது இறை நிலையில் மன அமைதி கொடுக்கும் . பூபாளம் இசைக்கும் என்ற திரைப்படப் பாடலையும் பூபாளராகத்திற்கு உதாரணமாகக்கூறலாம்.

மதிய வேளையில் பாட ஏற்ற பண்கள் (ராகங்கள்). பஞ்சமம் (ஆகிரி), பழந்தக்க ராகம்(ஆரபி, சுத்தசாவேரி) மாலை நேரத்தில் சாதாரி பண் (பந்துவராளி), வியாழக் குறிஞ்சி (சௌராட்டிரம்) இரவு தூங்கும் பொழுது பாடல் கேட்பதைவிட மொழி இல்லாத ஏதேனும் ஒரு கருவியிசையைக் **(instrumental music)** கேட்பது மனதுக்கு நலம் தரும்.



## இசையின் மூலம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை

தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் செயல்வழிக் கற்றுக் கொடுத்தல் என்பது ஆடிப்பாடிக் கற்றுக்கொடுத்தல் அவசியமான ஒன்று. பாடல்கள் கற்றுக் கொடுக்கும் பொழுது ஒரே மாதிரி சொல்லிக் கொடுக்காமல் எதுகை மோனையுடன் **(Rhyming)** வேற வேற ராகங்களில் சொல்லிக் கொடுத்தல் நலம். அப்பொழுது மாணவர்கள் நன்றாகக் கற்பிப்பதைப் புரிந்து கொள்வார்கள். அதுதான் தொடக்கப்பள்ளி நிலையில் நலம்.நடுநிலைப்பள்ளி குழந்தைகளுக்கு இசையின் மூலம் கற்பதற்கு பழக்கப்படுத்தும் பொழுது அவர்களுக்கு கடினமான சமன்பாடு **(equations),** விதிமுறைகள் **(formula),** வாய்ப்பாடு போன்றவை எளிதாக இருக்கும். நன்கு பழக்கத்தில் இருக்கும் மெட்டுக்களில் சொல்லிக் கொடுக்கலாம். உதாரணமாக கந்த சஷ்டி கவசம், போன்ற நன்கு அனைவருக்கும் பரிச்சயமான மெட்டுக்கள்.

இசையின் மூலம் இறைவனைக் காணலாம் என்பர் நம் முன்னோர்கள். அத்தகைய இசையின் மூலமாக எந்த மொழியையும் சொல்லிக் கொடுக்கலாம். இசைக்கு மொழி தேவையில்லை. இசை என்பது இன்னொரு மொழி. எவ்வளவு கடினமான விஷயமாக இருந்தாலும் மொழி தெரியவில்லை என்றாலும் கூட இசையின் மூலமாக எளிமையாகக் கற்றுக் கொடுக்க முடியும்.

### அன்பில் விளைந்த செல்வம்

தித்திக்க
தித்திக்க
அதிரசம்
எத்திக்கும்
எத்திக்கும்
அதிசயம்

உள்ளத்தில்
பொங்கும்
சந்தோசம்

உலகெலாம்
ஆடிப் பாடும்
உல்லாசம்

வருவதை
எல்லாம்
வரவேற்போம்
வாழ்க்கையில்
அதுவே
வசந்தமாகும்

அன்பில்
விளையும்
செல்வங்கள்
கோடி
கோடி
இனிய
வாழ்த்துகள் !



கவிஞர் பரந்தூர் இராமசாமி


Shree
SARVESHWARA
Tours
9716097960
1/450/A3, Avinashi road, Neelambur,
Coimbatore -641062


NEW
ARRIVALS
SRI RUDRAM
SAREES
Elegance in Every Drape
Premium Cotton | Silk | Designer Sarees
Traditional & Modern Collections
Handpicked Quality
Wear Elegance.
Own the Moment.
Serayampalayam, Arasur Road – 641048
@sri_rudram_sarees_2025
9994197993



# ஞானகுரு ருத்ரமகரிசி சுவாமிகளின் அருட்பயணம்

ஆதிசக்தி மாயோனி

காலம் தோறும் இந்த மண்ணில் சித்தர்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனர்.ஏன் அவர்கள் இந்த மண்ணில் தொடர்ந்து அவதரித்துக் கொண்டிருக்க வேண்டும். அவர்களுடைய நோக்கம் தான் என்ன என்று சிந்தித்தோமானால் சித்தர்களினுடைய பிறப்பின் நோக்கமானது.

மனித மாண்புகள், அன்பு நெறிகள், அறநெறிகள் ஆகியவை சமநிலை கெடாமல் ஒரு துலாக்கோள் போல இந்த உலகைத் தாங்கிப் பிடிப்பதற்காகச் சித்தர்கள் மீண்டும் மீண்டும் மண்ணில் பிறந்து கொண்டிருக்கிறார்கள்.

சித்தர்களின் வாழ்க்கை என்பது அவ்வளவு எளிதான வாழ்க்கை அல்ல. முள் மேலான படுக்கையைப் போன்றது. மிகுந்த கட்டுப்பாடுகள் நிறைந்தது. அந்தக் கட்டுப்பாடுகள் என்பது தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்வது.

மனித மனங்கள் பல்வேறுவிதமான ஆசைகளினால் அதன் தூண்டுதலினால் பிரிந்து தனிமைப் பட்டுக்கிடக்கின்றன.

இன்றைக்கு எல்லாவிதமான வியாபாரங்களும் அது சார்ந்த விளம்பரங்களும் மனிதனை மனிதனாக மதித்துக் கேட்க வேண்டியவை எதுவுமில்லை என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

இணையத்தைக் திறந்தால் எப்போதும் எல்லாமும் கிடைக்கிறது. தனக்கு எல்லாம் தெரியும் என்ற இறுமாப்பை அது வளர்த்து விடுகிறது. தூண்டுகிறது. பிரிந்து கிடக்கும் மனித மனங்களை ஒன்றிணைத்து, இந்த மண்ணில் உள்ள பல்வேறு விதமான வேறுபாடுகளைக் களைந்து. மக்களை அன்பால் ஒன்றிணைத்து, அந்த அன்பை அறநெறியோடு பின் தொடர்ந்து எல்லாக் காலத்திற்கும் ஏற்ற செயல்களைச் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றனர். தான் மட்டுமல்லாது மக்களையும் அவற்றைச் செய்வதற்குத் தயார்படுத்துகின்றனர்.

ஒரு மரத்தை நடவைக்க வேண்டும். அதைப் பாதுகாக்கும் பொறுப்பை வழங்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூற வேண்டும். இம்மாதிரியான நல்ல செயல்களில் மனிதர்களை ஈடுபடுத்தி, அவர்களையும் செம்மை படுத்தி ,இந்த மண்ணையும் செம்மையுறச் செய்வதே சித்தர்களின் நோக்கமாகும்.

**சித்தர்கள் என்பவர்கள் யார்?**

சித்தத்தை அறிந்தவர்கள் சித்தர்கள். தன்னை அறிந்தவர்கள் சித்தர்கள். சித்தம் தெளிந்தவர்கள் சித்தர்கள்.

சித்தர்கள் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்பவர்கள். உண்மைக்காக வாழ்பவர்கள். அன்பு, கருணை, நேர்மை உண்மை, எளிய வாழ்க்கை, தூய வாழ்க்கை வாழ்பவர்கள்.

சித்தர்கள் என்பவர்கள் பெரிய ஞானிகள், மருத்துவர்கள், தத்துவவாதிகள், அன்பர்கள், மனித மாண்பாளர்கள், மிகுந்த இயல்பானவர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், தெய்வத்தன்மை கொண்டவர்கள், முக்காலத்தை உணரும் தன்மை கொண்டவர்கள்.

யோகக் கலை, தியானம் ஆகிவற்றில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். உடல், மனம், சிந்தனை,செயல் ஆகியவைகளில் வேறுபாடின்றி இருப்பவர்கள். இப்படித்தான் சித்தர்கள் இருப்பார்கள் என்று எந்த வரையறைக்குள்ளும் அடக்கிவிட முடியாத சக்திகளை பெற்றவர்கள். அப்படி ஓர் ஆற்றல் மிக்க சித்தர் தான் ஞானகுருருத்ர மகரிசி சுவாமிகள். அவர் நாடு, மதம், மொழி, இனம் கடந்த எல்லையற்ற பேராற்றலை, அருளாற்றலைப் பெற்றவர். உலக இயக்கத்தைப் பிரபஞ் சத்தை, இறையாற்றலை, உயர்ந்த மானுட தத்துவத்தை, அறிந்தவர். அதன்படி நடந்தவர். எல்லோரிடத்திலும் எல்லா உயிர்களிடத்திலும் அன்பை மழையாகப் பொழிந்தவர்.

இனிய சொற்களை மட்டுமே பேசுபவர். எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பரந்த மனதுக்காரர். யார் தவறு செய்திருந்தாலும் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டி, இனி இந்தத் தவறு நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்பார்.

மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ தவறுகள் செய்வதென்பது மிகவும் இயல்பு. தவறுகளின்றி எதையும் கற்றுக் கொள்ளமுடியாது. தவறுகள் தான் மனிதர்களுக்கு மிகச்சிறந்த ஆசான் என்று எடுத்துச்சொல்லி தவறு செய்தவர்களைத் தண்டிக்காமல் அதேசமயம் அவர்கள் தானாகவே திருந்தும் வழிகளையும் எடுத்துரைப்பார்.

அந்த இடத்தில் தான் மனிதர்களுக்குக் குருமார்கள் தேவைப்படுகிறார்கள். குற்றம் செய்தவர்கள் எல்லோரும் தண்டனைக்கு உட்பட்டுத் தான் ஆக வேண்டும். மனிதர்களை மீண்டும் மீண்டும் தவறுகள் செய்யாதிருக்கப் பழக்குவதன் மூலம் அடுத்தடுத்து வரும் தண்டனையிலிருந்து காக்க முடியும். அப்படிப் பல்வேறு விதமான மக்களைப் பல்வேறு தருணங்களில் பாதுகாத்து வந்தவர் ஞானகுரு ருத்ர மகரிசி சுவாமிகள்.

அவருடைய வாழ்க்கையானது பல்வேறு விதமான விந்தைகளையும் வியப்புகளையும் கொண்டது. இந்த நேரத்தில் என்ன செய்வார் என்று யாரும் கணிக்க முடியாத படிக்கு அவருடைய வாழ்க்கைப் பயணம் அமைந்திருந்தது.

திடீரென்று ராமேஸ்வரம் போகலாம் என்று சொல்வார். அவருடைய ஓட்டுநர் தெய்வமணியிடம் சொல்லி வைப்பார். காலையில் எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று. அவர் சொன்ன நேரத்திற்கு முன்பாகவே வந்து காத்துக் கொண்டிருப்பார் தெய்வமணி. காலை 10 மணிக்குப் போகலாம் என்று சொல்லி இருப்பார். ஆனால் அந்த நேரத்தில் வேறு ஏதேனும் சிந்தனையில் மூழ்கிவிடுவார்.

ஒவ்வொரு மணி நேரமாகக் கடந்து கொண்டிருக்கும். மணி பன்னிரண்டாகிவிடும். மூன்று மணி கூட ஆகிவிடும். அப்பொழுதும் அவர் கிளம்ப மாட்டார். ராமேஸ்வரம் செல்ல வேண்டும் என்ற பயணத்திட்டமே நினைவில் இல்லாதது போல் இருப்பார்.

நேரம் கடந்துகொண்டிருக்கிறது. சாமி வேறு பணிகளில் வேறு சிந்தனைகளில் மறந்திருக்கலாம் . சற்றே நினைவு படுத்தலாம் என்று தயங்கித் தயங்கி ராமேஸ்வரம் பயணத் திட்டத்தை நினைவு படுத்தலாம் என்று தெய்வமணி அருகில் செல்வார். மிகுந்த பணிவோடும் மரியாதையோடும்‘ சாமி நேரமாச்சுங்க சாமி ...’ என்பார்.

அப்படியா..! நேரம் ஆயிடுச்சா..! போகலாம் போகலாம். இருங்க போகலாம்..’என்பார் சிரித்த முகத்தோடு. சரிங்க சாமி ‘என்று கேட்டுக்கொண்டு வெளியே வந்துவிடுவார்.மீண்டும் காரை நன்கு துடைத்து விட்டு, சாமியைப்பார்க்க வந்தவர்களிடம்

பேசிக் கொண்டிருப்பார் தெய்வமணி. அன்று மாலை ஆறு மணி ஏழு மணி ஆகிவிடும். அப்போதும் கூட கிளம்ப மாட்டார். அவருடன் சேர்ந்து பயணம் செல்லலாம் என்று வந்தவர்களும் சோர்ந்து போய்விடுவார்கள். இரவு சாப்பாட்டை முடித்துவிட்டுப் பொறுமையாக எடுத்துச் சொல்வார்.

கோயிலுக்குள் வேக வேகமாகச் சென்று அங்குள்ள மூலசக்தியைப் பார்ப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கோயிலுக்குள் செல்லக்கூடாது. கோயிலை ஒரு மணிக்கு மூடிவிட்டார்கள் சாமியைப் பார்க்கமுடியாதே என்று எண்ணிக் கொள்வதும் தவறு. நீங்கள் வணங்கும் தெய்வம் என்பது அங்கு மட்டும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்போது நீங்கள் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தீர்களோ அப்போதே நீங்கள் அங்கு சென்று விட்டீர்கள். இன்றைய பொழுது முழுவதும் அங்கு தான் கழிந்தது.

இன்றைய பொழுது முழுவதும் உங்களுக்கு வேறு சிந்தனையே இல்லை.

இதை விட வேறு என்ன வேண்டும் என்பார்?

தொடரும்....

*





# பெண்கள் முன்னேற்றத்திற்குக் கல்வியும் சுதந்திரமும் அவசியம்.

ஆ.ஜனனி ,
இளங்கலைத்தமிழ்
இரண்டாமாண்டு,
மதுரை தியாகராசர் கல்லூரி,மதுரை.



பெண்ணியம் சார்ந்த பல ஆயிரம் புத்தகங்கள் வெளிவந்தபடி இருக்கின்றன. உலகளவில் புகழ்பெற்ற பெண்ணிய எழுத்தாளர்களான சிமோன் தி பூவா, மேரி உல்ஸ்டன் கிராஃப்ட், பெட்டி பிரைடன், கேட் மில்லன்ஞ் போன்றவர்கள் பெண்களின் அடிப்படைத் தேவைகள், இப்போது பெண்கள் இருக்கும் நிலை, பிரச்சனைகளில் இருந்து வெளி வருவதற்கான வழிகள் என்று இவை அனைத்திற்கும் தங்கள் கருத்துக்களைத் தொகுத்து தந்துள்ளனர். தமிழ்நாட்டிலும் பெண்களுக்காகப் போராடியவர்களில் ஆண்களும் முக்கிய இடம் பெறுகிறார்கள் என்பதில் மாற்றுக்கருத்து ஏதுமில்லை. (பாரதியார், பெரியார் போன்றவர்கள்). வீதிக்குச் செல்வோம் என்று கேப்டன் லட்சுமி போன்ற போராளிகள் பலர் கொந்தளித்ததன் காரணமாகவே இந்தியச் சட்டம் பெண்களுக்கு ஓட்டு போடும் உரிமையே தந்தது. இந்திய ராணுவத்தில் ஆணுக்குச் சமமான உயர்நிலையை பெண் அடைவதற்கு, சட்டரீதியில் ஐம்பதறுபது ஆண்டுகள் போராடவேண்டி இருந்தது.

## பெண்ணியம்

**Feminism** என்ற சொல்லின் நேர்தமிழ்ச் சொல் பெண் நிலை வாதம் என்று பெண் விடுதலை இயக்கங்கள் பயன்படுத்தி வருகின்றன. ஆனால் கல்வியாளர்கள் பெண்ணியம் என்று குறிப்பிடுகிறார்கள். பெண் வாதம் விவாத நோக்கிலும், பெண்ணியம் ஆய்வு நோக்கிலும் அவர்களைப் பார்க்கிறது. பெண்ணியம் என்ற கோட்பாடானது பெண்களை நவீன மயமாக்கும் சிந்தனையின் எழுச்சியாகும். பெண்ணை ஓர் ‘உயிர்’ எனச் சமூகம் அங்கீகரித்து, அவளுக்கு ஆணுக்கு சமமான உரிமையையும் சுதந்திரத்தையும் கொடுக்கத் தூண்டும் ஒரு கொள்கையென மு.கல்யாணசுந்தரி போன்றோர் பதிவு செய்கிறார்கள்.

## கல்வி நிலை

சங்ககாலப் பெண்களுக்குக் கல்வி நிலையில் தடையேதும் இல்லாமல்

இருந்தது. அக்காலத்திலேயே ஔவையார், வெள்ளிவீதியார், ஒக்கூர் மாசாத்தியார் கல்வியில் சிறந்து விளங்கினர். 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?' என்ற வினா எழுந்தது இடைக்காலத்தில் தான். இக்காலத்தில், பெண்களின் கல்வி மட்டும் அல்ல அவளின் சுதந்திரத்தில் இருந்து அனைத்திற்குமே முட்டுக்கட்டை இடப்பட்டது. அறியாமை நீங்கவும், சமூக உரிமைகளை அறிந்து கொள்ளவும், தனக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்துப் போராடும் துணிச்சலையும் கல்வியறிவு மூலமே பெண்கள் பெறுகிறார்கள். இதற்கு சிறந்த சான்று, தமிழகத்தை சேர்ந்த நந்தினி தனக்கு நடக்கவிருந்த குழந்தை திருமணத்தை ஒன்பதாம் வகுப்பு பயிலும்போதே துணிச்சலாக தனியாக தடுத்து நிறுத்தினாள்.

**"வீதிதோறும் இரண்டொரு பள்ளி**
**நகர்களெங்கும் பலபல பள்ளி"**

**- பாரதி**

ஒவ்வொரு வீதியிலும் இரண்டு பள்ளி, நகரமெங்கும் பல பள்ளி என்ற பாரதியின் ஆசை நிறைவேறி வருகிறது. ஆனால், அங்கு பெண்கள் பயில்வதும் தங்கள் கல்வியை இறுதிவரை வெற்றிகரமாக முடிப்பதும் பெரும் சவாலாகவே கிராமப்புறப் பெண்களுக்கு இன்றும் உள்ளது.

## நூல்கள் கூறும் பெண்களின் நிலை

'பெண் இனம்' நாவலின் ஆசிரியர் திரு.சங்கரராம். ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கு இடையே மத்திய கிழக்கில் போர் நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலுக்குப் பொருந்தும் படி இந்நாவல் அமைந்துள்ளது. விஞ்ஞானத்தின் உதவியால் தோன்றியுள்ள அணுகுண்டு போன்ற படைக்கலங்கள் கொண்டு போர் ஏற்பட்டால் உலகம் அழிந்துவிடும். பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அன்பின் திறத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை இந்நாவல் வாயிலாக உலக மக்களுக்கு ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

'புதிதாய்ப் பிறப்போம்' என்னும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ஜி.ஏ.பிரியா. திருமணத்திற்குப் பிறகு பெண்கள் வீட்டில் முடங்கி விடக்கூடாது, அவளுக்கென்று ஒரு தனித்திறமை உருவாக்கிக் கொள்ள வேண்டும், கல்வி பயின்று சுயமாக சம்பாதித்து தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற கருத்தை இத்தொகுப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

'லாரா' நாவலுக்கும் மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் வீராங்கனை லாராக்கும் ஒரு நெருங்கியத் தொடர்பு உள்ளது. லாரா நாவல் முடியும் அதே சமயம் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மேட்சில் 501 ரன்கள் எடுத்து அவர் செய்துள்ள உலக சாதனை இன்றளவும் முறியடிக்கப்படாமல் இருக்கிறது. பெண்களுக்கு முன்மாதிரியாக இன்றளவும் திகழ்கிறார் லாரா.

## பெண்தானே

**– கார்த்திசிவா**

மனதளவிலும் உடலளவிலும் துணிச்சலாக இருக்கும் பெண்களால்

கூட சமாளிக்க முடியாத பிரச்சனை இச்சமூகத்தில் இருக்கிறதென்றால் அது பாலியல் தொல்லையே. இரவு 12 மணிக்கு மேல் ஒரு பெண் தனியாக, சுதந்திரமாக, எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாமல் என்று இவ்வுலகில் வலம் வருகிறாளோ அன்றுதான் பெண் சுதந்திரம் என்னும் சொல்லானது முழுமை அடையும். பாலியல் தொல்லை அதிகமாக நிகழும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. பெண்களுக்கும் சிவப்பு நிறத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மருதாணி வைப்பது, செம்பஞ்சு குழம்பு தீட்டுவது, சிவப்பு திலகமிடுவது இவையெல்லாம் சம்பிரதாயங்களில் ஒன்று. ஒரு பெண் பூப்பெய்திய போதும் சரி, பிள்ளை பெறும் போதும் சரி குருதியைக் கண்டு மிரட்சி அடையக் கூடாது என்பதற்காக சிறுவயது முதலே அவளுக்கு இந்நிறம் பழக்கப்படுத்தப்படுகிறது. இரண்டு மாத கர்ப்பிணியாக இருக்கும்போதே எமிலி கோபர் 2006ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் ஜெர்மனிக்காக விளையாடி வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

## முடிவுரை

'பெண்ணை வாழ்கவென்று கூத்திடுவோமடா' 1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சி நடந்தது. அப்போது, சமத்துவம், வாக்குரிமை, வேலைக்கேற்ற ஊதியம் ஆகியவை வேண்டுமென்று பெண்கள் போராட்ட களத்தில் இறங்கினார்கள். ஐரோப்பா முழுவதும் அமெரிக்காவிலும் இந்த போராட்டமானது விரைந்து பரவியது. இதனை தொடர்ந்து பிரான்சின் இரண்டாம் குடியரசை நிறுவிய லூயிஸ் 1848 மார்ச் எட்டாம் தேதி பெண்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார். அனைத்துலக பெண்கள் மாநாடானது வீரப் பெண்மணி கிளாரா ஜெட்கிங் தலைமையில் நடந்தது. ஆண்டுதோறும் மார்ச் எட்டாம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று ஹெலன்ரா பிரகடனம் செய்தார். இது, ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப்பட்டது. ஆணாதிக்க சமூகத்தில், ஒரு காலத்தில் பெண்கள் அவர்களுக்குரிய உரிமைகளை பெறவேண்டி போராடினார்கள். இப்போது, சுதந்திரம், சமத்துவம், உரிமைகளைப் பெற்று சாதனை படைத்துக் கொண்டிருக்கும் பெண்களைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.





# கோடையைச் சமாளிக்க

வெளியில் செல்லும் போது குடை எடுத்துச் செல்லுங்கள்.பருத்தி ஆடைகளைத் தேர்வு செய்யுங்கள். இறுக்கமாக அல்லாமல் இலகுவாக உடையணியுங்கள். வெளியில் செல்லும்போது கண்டிப்பாக எலுமிச்சை உப்பு சர்க்கரை கலந்து குடிநீரை எடுத்துச் செல்லுங்கள். சன்கிளாஸ் அணிந்து கொள்ளுங்கள். சன் ஸ்கிரீன் லோஷன் பயன்படுத்துங்கள்.

***

வியர்வை துர்நாற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள குளிக்கின்ற நீரில் வெட்டிவேர் சிறிதளவு வேப்பிலை ஆரஞ் சுத்தோல் போட்டு ஊற வைத்து அந்த நீரில் குளியுங்கள்.



மண்பானை நீரைப் பயன் படுத்துங்கள். இளநீர், பதநீர் ஆகியவற்றை அதிகம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மிகுந்த காரமாகவும் மிகவும் சூடாகவும் உணவை எடுத்துக் கொள்ளக் கூடாது.

நீர்த் தன்மை அதிகம் உள்ள உணவை எடுத்துக் கொள்ளுங்கள்.

***

குழந்தைகள் அதிகம் வெயிலில் சென்று விளையாடுவதனால் சரியான நேரத்தில் தண்ணீர் குடிக்க மறந்து விடுவார்கள். அதனால் வேர்க்குரு,வேனல் கட்டிகள், தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம். அப்போது இளம் நுங்கு சாற்றை உடம்பில் பூசி வர விரைவில் குணமாகும். இரும்புச்சத்து குறைவாக இருந்தால் உடலில் அடிக்கடி சோர்வு ஏற்படும்.

வெய்யிலைத் தாங்க முடியாத சூழல் ஏற்படும். அதனால் இரும்பு சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

முருங்கைக்கீரை, நெல்லிக்காய், பனங்கற்கண்டு, வெல்லம் மற்றும் முழு தானியங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

***

வெயில் காலங்களில் குளிப்பதற்கு சோப்புப் பயன்படுத்துவதற்குப் பதிலாகக் குளியல் பொடி பயன்படுத்துங்கள். குளியல் பொடியுடன் பன்னீர் அல்லது பால் கலந்து இருபது நிமிடங்களுக்கு மேல் ஊற வைத்து அதன் பின்பு பயன்படுத்தினால் உடல் பளபளப்பாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும். தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து வாரம் ஒரு முறை குளித்துவர உடல் சூடு தணியும். படித்துவிட்டுக் கடந்து விடாமல் அதனைச் செய்து பார்த்தால் மட்டுமே பலன்களை அனுபவிக்க முடியும்.

***

கோடையைச் சமாளிக்க நிறைய மோர் அருந்துங்கள் .நிறையத் தண்ணீர் குடியுங்கள். எப்போதும் குடிக்கும் அளவைவிட அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள். காலை நேரத்தில் இளவெயிலில் சிறிது தூரம் நடைப்ப யிற்சி செய்யுங்கள். உடல் அன்றைய கோடை வெப்பத்தைத் தாங்குவதற்குத் தயாராகிவிடும். காலை நேரத்து நடைப் பயணத்தில் நிறைய வியர்வை வெளியேறுதல் நலம். எப்பொழுதும் ஏசி அறைகளில் அமர்ந்து பழகிவிட்ட



உடலுக்கு காலை நேர இளவெயில் நடைப்பயணம் மிகவும் நல்லது. தவறாமல் செய்யுங்கள்.

## கோடையில் தித்திக்கும் லஸ்ஸி

ஒரு கொத்து புதினா இலைகளை நன்கு சுத்தம் செய்து அரைத்து கொள்ளவும்.பின்பு அதனை வடிகட்டவும் தேவைக்கேற்ப அச்சு வெல்லத்தைப் பொடி செய்து அதனைப் புதினா நீரில் கரைத்துக் கொள்ளவும். தேவையான அளவு ஐஸ் கட்டிகளைப் போட்டு இரண்டு கப் அளவு நன்கு புளித்த தயிரை ஐஸ் கட்டிகளுடன் சேர்த்து மிக்ஸியில் அடிக்கவும். புதினா கரைசலுடன் அடித்த தயிரைக் கலந்து பருகவும். இது உடலுக்கு மிகவும் ஏற்ற குளிர்ச்சியான பானம்.



# தேர்வு என்பது வாழ்க்கையில் ஒரு பகுதி மட்டுமே





பேரா மரு.ஜி.ச.திரிவேணி பாலாஜி, எம்.டி.நோயியல்.

தேர்வு என்பது வாழ்க்கையில் ஒரு பகுதி மட்டுமே அன்றி அதுவே வாழ்க்கை என்பது அல்ல. வெற்றி, தோல்வி இரண்டையும் எதிர்க்கொள்ளும் மன உறுதி அவசியம். தேர்வில் தோல்வியடைந்தால் அதற்கு அடுத்து என்ன செய்யலாம் என்று 'திட்டம்' ஒன்றை ஆலோசித்துப் பெற்றோருடன் பேசி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மனதளவில் தயாராகி மன உறுதியோடு தேர்வை எழுதச்செல்ல வேண்டும்.

பெற்றோர்கள் ஒரு குழந்தையின் எதிர்காலத்திற்கு அஸ்திவாரம் போடுபவர்கள். தங்களின் நிறைவேறாத விருப்பங்களைக் குழந்தைகள் மூலமாகச் செயல்படுத்தி, அழகுப்படுத்தி, கௌரவப்படுத்திப் பார்ப்பதில் முதலும் முடிவும் அவர்களிடத்திலேயே உள்ளது. இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை ஆனால் இதனை செயல்படுத்தும் விதத்தில், அணுகு முறையில் அதனை நிறைவேற்றுவதில் பெற்றோர் மறப்பது குழந்தையின் விருப்பம். குழந்தையின் திறமை அல்லது சமூகத்தில் நிலவும் போட்டி.

தங்களுடைய செலவு செய்யும் அளவுகோல் இன்னும் பலப்பல காரணிகள். கப்பலை செலுத்தும் மாலுமி போலும் உள்ள பெற்றோர் இதனை உணர்ந்து பற்பல யோசனைகளையும் பல பேரிடம் கருத்தறிந்து அதனை ஒரு புத்தகத்திலே அல்லது டைரியில் எழுதி, தங்கள் குழந்தைகளிடம் வாரத்திற்கு ஒருமுறை வருங்காலத்தைப் பற்றி ஆலோசனை செய்து குடும்பமாக முடிவு செய்தால், குழந்தைகள் தேர்வைப் பயமின்றி தைரியமாக, தெளிவாக, மனோதிடத்துடன் எழுதுவதற்கு உதவியாக இருக்கும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது



நிதர்சனமான உண்மை. குருவின் ஸ்தானம் இருளை அகற்றுவது. வருட ஆரம்பத்திலேயே தேர்வு குறித்த ஒரு விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அதாவது தேர்வின் பாடத்திட்டம், பகுதிகள், முறை, முதல் வருட வினாத்தாள், தேர்ச்சி மதிப்பெண், உயர் மதிப்பெண், மாநிலத்தில் முதல் மதிப்பெண், மாவட்டத்தில் முதல் மதிப்பெண், உதவித்தொகை விபரங்கள், செய்முறை திட்டம், தேர்வு நடக்கும் இடம், தேர்விற்கு பிறகு முடிவுகள்வெளியாகும் விதம், தேர்வுக்கு நுழைவு சீட்டு பற்றிய விபரங்கள் தேர்விற்குப் பின்னர் அவர்களுக்கு உரிய படிப்புகள், படிப்புக்குரிய தொழில்கள்,தொழில் முறைத்தேர்வுகள் **TNPSC,UPSC,Bank exam** தேர்வுக்குரிய பயிற்சிகள் ,கல்வி உதவித்தொகை பெறுவது என்று ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் மீட்டிங் நடத்தி அவர்களது ஐயங்களை நிவர்த்தி செய்து தனித்தனியாகக் கவுன்சலிங் நடத்தி ஒவ்வொரு மாணவரின் பல்வேறு திறமைகளின் அடிப்படையிலும் மற்ற அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு மாணவரின் குடும்பம் தெளிவாகப் புரிந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

இதன்மூலம் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு மாணவருக்குச் செய்ய வேண்டிய கடமையினை செய்தால் ஒவ்வொரு குடும்பமும் நிறைவாக இருக்கும் இந்தியா நிச்சயமாக முன்னேறும். அதற்கு, நாம் முடிந்த அளவில் முயற்சி செய்வோம்.

தேர்வு தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்தே ஒரு குறிப்பேட்டில் தேர்வுக்கான தயாரிப்பு குறித்த அட்டவணை நாள்தோறும் படிக்க வேண்டிய பாடங்கள் முதல் திருப்புதல் இரண்டாம் திருப்புதல் மூன்றாம் திருப்புதல் என்று பாடங்களைப் பிரித்து எழுதி திருப்புதல்; ஒரு நாளில் ஒரே

பாடத்தை மட்டும் படித்தால் சற்று அழுத்துவிடும் அதனால் ஒரு நாளில் இரு வேறு பாடங்களைப் படித்தால் சிறிது சுலபமாக இருக்கும். இது அனைத்தையும் கருத்தில் கொண்டு இரண்டு வாரங்கள் முதல் திருப்புதல் ஒரு வாரம் இரண்டாம் திருப்புதல் கடைசி வாரம் மூன்றாம் திருப்புதல் என்று அட்டவணை போட்டுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு திருப்புதலுக்கும் ஒன்று அல்லது இரண்டு நாட்கள்ஓய்வெடுக்கும் நேரம் ஆக விடவேண்டும் அதாவது சில நாட்களில் நாம் படித்து முடிக்க வேண்டிய பாடங்களைப் படிக்காமல் விட்டிருப்போம். அந்த விட்டுப் போன பாடங்களை இந்த ஓய்வு நேரங்களில் முடிக்க வேண்டும். பாடங்களைப் தங்கள் பெற்றோரிடம் சத்தமாகச் சொல்லிப் பார்க்கலாம் அல்லது முக்கியமான குறிப்புகளை மாதிரி எழுதி பார்க்கலாம் பழைய பத்து வருட வினாத்தாள்களை ஒவ்வொரு கேள்வியாகச் சொல்லிப் பார்க்கலாம் இது மிகுந்த உபயோகமாக இருக்கும். தேர்வு நேரத்தில் தூக்கம் மற்றும் உணவுப் பழக்கம் மிகவும் முறையாக இருக்க வேண்டும்.

அசைவம் மற்றும் வெளியில் இருந்து வாங்கும் உணவுகளை தவிர்த்தால் நல்லது. குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும் முடிந்தவரை காரம் ,எண்ணைப் பலகாரங்களை தவிர்க்க வேண்டும். உலர்ந்த திராட்சை, முந்திரி, பாதாம், பிஸ்தா, அனைத்துப் பழ வகைகளையும் நடுவில் உட்கொள்ளலாம். நிறையத் தண்ணீர் பருக வேண்டும் ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்களைத் தவிர்த்தல் நல்லது. குறித்த நேரத்தில் அதாவது 10:00 மணி அல்லது 11 மணிக்கு உறங்கச் செல்ல வேண்டும். அதிகாலை நான்கு அல்லது ஐந்து மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்து குளித்துவிட்டு, படிக்க உட்கார வேண்டும். பாட புத்தகத்தைப்படிக்கும் முன்னர் அந்த அந்த பாடங்களுக்குரிய கேள்விகளைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். புத்தகத்தைப் பார்க்காமல் கண்களை மூடிக்கொண்டு அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளை உதாரணமாக வளர்ப்பு நாய் ,எரியும் விளக்கு அதனைப் பார்த்து மனதில் அந்த கேள்விக்குரிய பதிலைச் சொல்லிப்பார்க்க வேண்டும் அல்லது வெற்றுத் தாளில் முக்கிய குறிப்புகளை எழுதி பார்க்க வேண்டும். அதனைப் புத்தகத்தில் சரி பார்த்தபின் அந்தக் கேள்விக்கு விடை சொல்லி எழுதிப் பார்க்க வேண்டும்.

அதனைப் புத்தகத்தில் சரி பார்த்தபின் அடுத்த கேள்விக்கு விடை சொல்லி எழுதிப்பார்க்க வேண்டும். இப்படியாக நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மெலிதான ஒரு மெல்லிசையைக் கேட்டுக் கொண்டே இதனைச் செய்யலாம். இடையில் தூக்கம் வந்தால் தண்ணீரில் துணியை நனைத்து கண்களை முகத்தை துடைத்துக் கொள்ளலாம். தண்ணீர் பருகினாலும் தூக்கம் போய்விடும் நல்ல வெளிச்சமான இடத்தில் உட்கார்ந்து மனம் லயித்துப் படிக்க வேண்டும்.



# மாயோனி ஞானவொளி பீடத்தில்
# மகளிர் தின விழா

கோயம்புத்தூர் மாவட்டம் பாப்பம் பட்டியில் அமைந்துள்ள ஞானவொளி பீடத்தில் மகளிர் தினவிழா சிறப்பாக நடைபெற்றது.

போகர் தமிழ்ச்சங்கமும் மாயோனி ஞானவொளி பீடமும் இணைந்து நடத்திய மகளிர் தின நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராகத் தலைமைக் காவலர் ஜி கவிதா அவர்கள் பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். பெண்களுக்குக் கல்வி என்பது கண்களைப் போன்றது. கண்ணுடைய பெண்களுக்கு வாழ்க்கைப் பயணம் என்பது மிக எளிதாக அமைந்து விடுகின்றது.

தன்னம்பிக்கை, சுயமரியாதை, சொந்த காலில் நிற்றல், தனித்துவமான ஆளுமை ஆகிய அனைத்தும் பெண்ணுக்குக் கிடைத்து விடுகின்றது. அது கல்வியின் மூலமே அதிகம் சாத்தியமாகிறது. கல்விகற்காத பெண்கள் என்று யாரும் இருக்கக் கூடாது. எல்லோரும் கற்றவர்களாக வேண்டும்.

பெண்ணுக்கு நகையைவிட, அழகைவிட, திருமணத்தை விட, ஆடம்பரத்தை விடவும் கல்விதான் மிக மிக முக்கியம் மிகப்பெரிய சொத்து. தினந்தோறும் ஏதேனும் நல்ல செய்தியைப் படித்துக்கொண்டே இருங்கள். வாழ்வின் இறுதி நிமிடம் வரைக்கும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

கற்பதற்கு வயதில்லை. என்பதைத் திரு.மாயோனி அம்மா அவர்கள் எடுத்துரைத்தார். கோயம்புத்தூர் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் இல.மணி அவர்கள் கலந்து கொண்டு பேசியபோது குழந்தைகளுக்குக் கட்டாயம் தமிழில் பெயர் வையுங்கள். தாய்மார்கள் தான் தாய்மொழியைக் காகக்கமுடியும் என்று கூறினார்.

சரண்யா வரவேற்புரை வழங்கினார். நன்றியுரை சுமதி வழங்கினார். உறுப்பினர்கள் பேரா.கிருஷ்ண பாரதி, கவுதமி, சுலோச்சனா ,கிருஷ்ணவேணி, பிரகாஷ், பூபதி, ரேணுகா சிவகுமார்,ஈஸ்வரி,சிவராமகணேசன்,சிந்து, இரத்தினமூர்த்தி, சிவக்குமார், மாரிமுத்து, சரண் ஹரி சங்கர், முத்து சரஸ்வதி ,ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாயோனி ஞானவொளி பீடத்தின் செயலாளர் திரு கோவிந்தராஜ் அவர்களும் போகர் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் சு.இராமமூர்த்தி அவர்களும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்தனர்.




கோயம்புத்தூர் தமிழ்ச் சங்கமம், தமிழ்க் காப்புக் கூட்டியக்கம் மற்றும் போகர் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியின் பரிசளிப்பு விழா மற்றும் தமிழ்ச்செம்மல் திரு .செ.துரைசாமி அவர்களின் பவளவிழா இவ்விரு நிகழ்வுகளும் சேர்ந்து இணையவழியில் 29.3.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றது. நிகழ்ச்சியில் குறிஞ்சி யாழ் இசைப்பள்ளியின் செயலர். முனைவர் கிருஷ்ண பாரதி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி நிகழ்ச்சியை தொடங்கினார். பேரூர் ஆதீனம் திரு. சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சாமிகள் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து போகர் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் ஆதிசக்தி மாயோனி அம்மா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மேலும்

மேனாள் துணை வேந்தர் முனைவர் .சுப்ரமணியம், உலகத் தமிழ்க் காப்புக் கூட்டியக்கத்தைச் சார்ந்த புலவர் .கா.சா .அப்பாவு,தமிழாசிரியர். புலவர். சு .நஞ்சப்பன், உலகத் தமிழ்ச்சிற்றிதழ்கள் சங்கத்தலைவர் பூ.அ. இரவீந்திரன், பாரதியார் பல்கலைக்கழகத்தின் மேனாள்தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் சித்ரா ,புதுவையைச் சேர்ந்த பேராசிரியர் சம்பத்குமார், தமிழ்க் காப்புக் கூட்டியக்கத்தைச் சேர்ந்த திரு. விஜய சண்முகம் ,

கோவா தமிழ்ச்சங்கத்தை சேர்ந்த .திரு. பழனிச்சாமி ,விஜயா பதிப்பகம் திரு. வேலாயுதம் ,மும்பை லெமோரியா அறக்கட்டளையைச் சேர்ந்த திரு. குமணராசன், த.இபேரவையைச் சேர்ந்த புலவர். பொன்முடி சுப்பையன் ,சிமோகா தமிழ்ச்சங்கத்தை சேர்ந்த திரு. தண்டபாணி, மேனாள் தலைமையாசிரியர் புலவர் ம.நடராசன், மைசூர். திரு .கர்ணன், துடியலூர் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திரு. கலையரசன், தமிழ்க்காப்புக் கூட்டியக்கத்தைச் சேர்ந்த பொறியாளர் தமிழரசன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு திரு செ. துரைசாமி ஐயா அவர்களின் தமிழ்ப் பணிகள் குறித்து வாழ்த்திப் பேசினார்கள்.

தொடர்ந்து பரிசு பெற்ற கல்லூரி மாணவர்களின் கவிதைகள் வாசிப்பு நிகழ்ச்சி மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

போட்டியில் முதல் பரிசு அபிநயா பன்னீர்செல்வம், இளங்கலைத்தமிழ், மூன்றாம் ஆண்டு, டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை.

இரண்டாம் பரிசு இரா. ரவி பிரசாந்த், முனைவர்ப் பட்ட ஆய்வாளர், பிஷப் ஹீப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. மூன்றாம் பரிசு ரத்தின பிரபா ,பன்னிரெண்டாம் வகுப்பு மகரிஷி வித்யா மந்திர், காரைக்குடி. ஐந்து மாணவர்கள் ஆறுதல் பரிசு பெற்றனர்.1சு.அ. யாழினி ,அண்ணா பல்கலைக்கழகம். 2.ஹரிணி, பி.ஏ(தமிழ்) நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,3. வே .ஸ்ரீநிதி, பி.எஸ்.சி (நுண்ணுயிரியல்) மூன்றாம் ஆண்டு, எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை. 4.ரேணுகா சித்தம்மாள், பத்தாம் வகுப்பு, டி .எம். ஹெச். என். யூ வித்யாலயா மேல்நிலைப்பள்ளி.5. ஹரிப்பிரியா, சிவலிங்கபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, ராஜபாளையம், விருதுநகர்.

தொடர்ந்து தமிழ்ச்செம்மல் செ.துரைசாமி அவர்கள் ஏற்புரை வழங்கினார். நிறைவாக கோயம்புத்தூர் தமிழ்ச்சங்கமத்தின் பொருளாளர் கவிஞர். இல. மணி அவர்கள் நன்றியுரை வழங்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்





# விதையை விருட்சமாக்கத் தவம்

அந்தச் சிறிய அறையில் நிலவின் ஒளி ஜன்னல் வழியே கசிந்து, தொட்டிலில் உறங்கும் அந்தப் பிஞ்சு முகத்தைத் தழுவியது. தூக்கத்தில் அவ்வப்போது அந்தச் சிறு விரல்கள் எதையோ பிடிக்க முயன்று காற்றில் துழாவின. அருகில் அமர்ந்திருந்த தாயின் மனமோ ஒரு மெல்லிய நடுக்கத்தில் ஆழ்ந்திருந்தது. “இவனை வளர்ப்பது என்பது வெறும் உணவளிப்பதும், உடை உடுத்துவதும் மட்டும் தானா?” என்ற கேள்வி அவள் உள்ளத்தில் ஒரு கல்லை எறிந்தது. ஒரு செடியின் மொட்டு விரிவதற்கு முந்தைய அலாதி மௌனம் போல அந்தத் தூக்கம் இருந்தது.

குழந்தை வளர்ப்பு என்பது களிமண்ணைக் குழைத்துச் சிலையாக்கும் வேலையல்ல; அது ஒரு விதையை விருட்சமாக்கத் தவம் இருக்கும் பெருங்கலை. ஒரு சிற்பி கல்லைச் செதுக்கும்போது அதன் தேவையற்ற பகுதிகளைத் தான் நீக்குகிறான், சிலையையே சிதைப்பதில்லை. அதுபோலவே, குழந்தைகளின் பிடிவாதங்களை அன்பால் மெல்லச் செதுக்க வேண்டும்; ஆனால், அந்தச் செதுக்கலில் அவர்களின் சுயமரியாதை எனும் சுடர் அணைந்துவிடக் கூடாது என்பதில் தான் ஒரு பெற்றோரின் தவம் அடங்கியிருக்கிறது.

நாட்கள் நகர நகர, அந்தச் சிறுவன் வளரத் தொடங்கினான். அவன் விழுந்து எழும் ஒவ்வொரு முறையும் அவனது கையைப் பிடித்துத்

தூக்குவதை விட, அவன் தானாக எழுந்து தூசியைத் தட்டிச் செல்வதைப் பார்ப்பதே ஒரு தாய்க்குப் பெரும் சவாலாக இருந்தது. ஒரு பட்டாம்பூச்சி கூட்டை விட்டு வெளியேறும்போது அது தன் சிறகுகளைத் தானே அடித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்; நாம் உதவப் போய் அதன் சிறகுகளைத் தொட்டால், அதன் பறக்கும் திறன் அழிந்துவிடும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். மண்ணுக்குள் புதைந்திருக்கும் வேர் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஆனால் அதுதான் மரத்தின் உயிர்நாடி. அதுபோலவே, அவள் புகட்டிய நற்பண்புகள் அவனுக்குள் வேராகப் பாய்ந்திருந்தன.

அவன் ஒருமுறை தவறு செய்தபோது அவள் அவனைத் தண்டிக்கவில்லை; மாறாக, அவனது கண்களைப் பார்த்து மௌனமாகச் சிந்திய ஒரு துளிக் கண்ணீர், ஆயிரம் பிரம்புகளை விட ஆழமாக அவனுக்குப் புத்தியைப் புகட்டியது. அன்பு எனும் எருவும், புரிதல் எனும் நீரும் தாராளமாகக் கிடைக்கும்போது, அங்குக் கண்டிப்பு எனும் கத்தரித்தல் வலிப்பதில்லை.

இறுதியில், அவன் தன் சிறகுகளை விரித்துப் பறக்கத் தயாரானபோது, அவள் தடுத்து நிறுத்தவில்லை. அவன் அவளுடைய பிம்பமல்ல, அவனுக்கென்று ஒரு தனித்துவமான வானம் இருக்கிறது என்பதை அவள் முழுமையாக ஏற்றுக்கொண்டாள்.

கரடுமுரடான கற்களுக்கு இடையே பயணிக்கும் நதி எப்படித் தன் பாதையைத் தானே கண்டடைகிறதோ, அதே போன்றதொரு சுதந்திரத்தை அவனுக்குக் கொடுத்தாள். அவன் தூரத்தே பறந்து சென்றாலும், அவன் சோர்ந்து விழும்போது தஞ்சம் அடைய ஓடி வரும் 'தாய்மடி' எனும் புகலிடம் எப்போதும் திறந்தே இருந்தது. ஒரு பெற்றோரின் வெற்றி என்பது குழந்தையைத் தன்னோடு கட்டிப் போடுவதில் இல்லை; எத்தகையப் புயலிலும் சாயாத மனவலிமை எனும் வேரையும், வானைத் தொடும் கனவுகள் எனும் சிறகுகளையும் அவனுக்குள் உருவாக்கி, அவனை இந்த உலகிற்கு முழுமையான மனிதனாக அர்ப்பணிப்பதில்தான் இருக்கிறது என்பதை அந்த நிலவொளி மௌனமாக ரசித்துக் கொண்டிருந்தது. இந்த புரிதலே அந்தத் தாயின் தவத்திற்கான ஆகச்சிறந்த வரமானது.



**அபிநயா பன்னீர்செல்வம்,**
இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு,
டாக்டர் எம்ஜிஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை.



# நந்தவனத்தின் இருபத்தி ஒன்பதாண்டு சாதனை

மலேசியா மண்ணின், 'செம்மை' பண்முகத்தமிழ்ச்செல்வர் நா.ஆ. செங்குட்டுவன் அறிவுச்சோலையில் இனிய நந்தவனத்தின் 29 ஆம் ஆண்டுமலர் அறிமுகம் மற்றும் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகச் செம்மை டத்தோ சுரேஷ் ராஜா, டத்தோ கீதாஞ்சலி .ஜி, டத்தோ முருகையா, டத்தோ எம். பெரியசாமி, டாக்டர்.வே. செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.திரு. எம் கருணாகரன் இதழாய்வுரை செய்தார். சன்ஷைன் கல்விக் குழுமத்தின் நிறுவனர் டாக்டர் R.V.ஷ்யாம் பிரசாத் அவர்கள் தலைமையுரையாற்றினார்.



மாயோனி ஞானவொளி பீடத்தின் தலைவர் தவத்திரு. ஆதிசக்தி மாயோனி அம்மா அவர்கள் நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக இந்தியாவிலிருந்து கலந்து கொண்டார். உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் குழந்தைகளுக்குத் தமிழ்ச் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளுக்குக் குடும்பத்துடன் வரவேண்டும். ஒவ்வொரும் அவரவர் இல்லத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அதே அளவு முக்கியத்துவத்தை இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் கொடுக்க வேண்டும். அதேபோன்று உலகத்திற்குப் பொதுவானதாகத் திகழும் அன்பை ஒரு மார்க்கமாகக்கொள்ள வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள அன்பின் வெளிப்பாட்டை, காதலின் வெளிப்பாட்டை இருவருக்கும் இடையேயான அகவாழ்வைக் குறிப்பது மட்டும் தான் அன்பு என்பதல்ல.

அன்பு என்பது எல்லோருக்கும் பொதுவானது. அன்பிற்கு எத்தனைகோடி விளக்கங்கள் கொடுத்தாலும் அது மேலும் பல விளக்கங்களைத் தாங்கி நிற்கும் தன்மையுடையது.

எத்தனை மகான்கள் இந்த உலகில் தோன்றினாலும் அன்பின்றி எந்த தத்துவத்தையும் விளக்கவிட முடியாது.

நம்முடன் பயணிக்கும் சக மனிதர்களைப் போட்டியாளராக எண்ணாமல். எல்லோரிடமும் அன்பும் கருணையுமாக இருங்கள் என்று அன்பின் தத்துவத்தைத் தவத்திரு ஆதிசக்தி மாயோனி அம்மா அவர்கள் எடுத்துரைத்தார்.


இந்திய அரசும், மலேசியாப் பல்கலைக்கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள திருவள்ளுவர் ஆய்வு இருக்கையின் முக்கியத்து வத்தையும் அதன் செயல்பாடுகள் குறித்தும் அதனால் மலேசியா மக்கள் என்னென்ன பயன்களை எல்லாம் பெறமுடியும் என்று திருவள்ளுவர் ஆய்விருக்கை இந்தியவியல் துறைப் பேராசிரியர் முனைவர் செல்லபெருமாள் அவர்கள் எடுத்துக் கூறினார்.

குறிஞ்சியாழ் இசைப் பள்ளியின் செயலர் இசைப்பேராசிரியர் முனைவர் கிருஷ்ணபாரதி பாவேந்தர் பாடல் களைப்பாடினார்.

திரு.இரா.சந்திரன்,திரு.தேவராஜ், செம்மைநா. ஆ.சுந்தரேசன், செம்மை ஜெயசீலன், டாக்டர்.சதீஷ் இமயம், செம்மை சு.மகேந்திரன், திரு.பெ.இராமன்செம்மை. குணசேகரன்,தி.கு. தேவேந்திரன், திரு.சந்திரசேகர், கவிஞர்.காசிவிஸ்வ லிங்கம், ஓவியர். சந்திரன், செம்மை. சுந்தரமூர்த்தி, திரு.அ.பாலசுப்பிரமணியம், திரு.க.இராமச்சந்திரன், திரு.எம்.பி. கோவிந்தசாமி, திரு. மைக்கேல் பீமன், திரு சோழமன் சந்தியாகு, திரு. மு. காசி வேல், தமிழறிஞர் முல்லைப்பாண்டியன், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இனியநந்தவனம் இருபத்தி ஒன்பதாவது ஆண்டு மலர் வெளி யிடப்பட்டது. சாதனையாளர்களுக்கு விருதும் வழங்கப்பட்டது. இதழாசிரியர் சந்திரசேகரன் ஏற்புரை வழங்கினார்.

நிகழ்ச்சியைத் தமிழாசிரியர். செம்மை திரு. குணசேகரன் சடையன் அவர்கள் தொகுத்து வழங்கினார் . திரு. செம்மை சுமா. செல்வராஜ் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்தனர்.



பேராசிரியர் ஆ.செல்லபெருமாள்



# வாழ்வென்பது பெருங்கனவு

கல்பனா
யோகா ஆசிரியை



அக்கினித்தலமான திருவண்ணா மலைக் கோவிலின் ராஜகோபுரத்தின் முன்பாக ஊர்க்கூடி நிற்கிறது, முடியுமா? சாத்தியமா என அனைவரது முகத்திலும் ஒருவித எதிர்பார்ப்பு. கோபுரத்தின் வெளியே ஒரு சொகுசுக்கார் நிற்கிறது. கார் செல்லக்கூடிய பாதையைத் தவிர்த்து மற்றபடி எங்கும் கூட்டம். அந்த நடுத்தர வயதுப் பெண்ணைப் பார்த்ததும், ‘இவங்கதாம்பா காரை முடியில கட்டி இழுக்கப்போறாங்க’ என பரபரப்பு எழுகிறது. அப்போது ஒலிபெருக்கியில் அறிவிப்பு. அதைத்தொடர்ந்து கார் பம்பரும் கல்பனா என்ற அந்த பெண்ணின் கூந்தலும் தாம்புக்கயிறால் முடிச்சிடப்படுகிறது. உம் என் அடிமூச்சு ஓசையுடன் கல்பனா ஒரு அடி எடுத்து வைக்கிறார், கார் லேசாக அசைகிறது. அடுத்த அடிக்கு கார் உருளத் தொடர்ந்து கல்பனா நடக்க கார் உடன் பயணிக்கிறது. நானூறு மீட்டர் தூரத்தில் உள்ள டவுன் போலீஸ் ஸ்டேஷன் தாண்டி ஒரே மூச்சாகத் தனது தலைமுடியால்

அந்த இயந்திரப் பிசாசை கல்பனா அசால்ட்டாக இழுத்துவந்ததைப் பார்த்த மக்கள் கூட்டம் பலத்தக் கைத்தட்டலுடன் ஆரவாரிக்கிறது.

அசாத்தியத் துணிச்சலும், மனஉறுதியும், தன்னம்பிக்கையும் பெண்களுக்கு ஏற்பட வேண்டும் என உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில், ‘பெண் சக்தியால் மலையைக்கூட ....ல் அசைக்க முடியும்’ என சாதித்த கல்பனாவுக்கு விருது வழங்குகிறேன் என காவல்துறை டி.எஸ்.பி. உயர்திரு அண்ணாதுரை பாராட்டினார்.

## இளமைப்பருவம்

கல்பனாவைச் சந்தித்துப் பேச்சுக் கொடுத்தோம், அப்பப்பா சரளமாக வார்த்தைகளைக் கொட்டுகிறார், பரிதவிப்பு, நிராசை, பெருங்கனவு என அருவியாய் அவரிடமிருந்து வார்த்தைகள் வந்தன. இனி அவரே பேசுகிறார்.

‘அப்பா ரவிச்சந்திரன், அம்மா மஞ்சுளா, கவிதாவும் பாபுவும் தங்கை தம்பி. எங்கள் பகுதியில் உள்ள விக்டோரியா மகளிர் நடுநிலைப் பள்ளியில் அடிப்படைக் கல்வி அதன்பின் கர்நாடக மாநிலம் கோலார் பாலிடெக்னிக்கில் டிப்ளமோ கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்தேன். சொல்லிக்கொள்ளும் வகையில் குடும்பத்தில் பொருளாதாரம் இல்லை. எனினும், சிறு வயதிலேயே கையிலிருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்ணும் பாங்கு இருந்தது. அப்போது, கலெக்டராகி ஊருக்கும் நல்லது செய்ய வேண்டும் என நினைத்தேன். அக்கம்பக்கத்திலிருந்தவர்களும் எனது கலெக்டர் ஆசைக்கு ஊக்கமளித்தனர். பொருளாதார நெருக்கடியால் எனது கனவு கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புடன் சிதைந்தது.

அப்போதெல்லாம் டிவியில் சாதனையாளர்கள்ப் என பலரது பேட்டி ஒளிபரப்பாகும். இந்த மாதிரி நீயும் சாதிக்கணும்மா அப்படீன்னு எங்க அப்பா என்னை திட்டிக்கிட்டும், தூண்டிவிட்டுக்கிட்டும் இருந்தார்.

டிப்ளமோ முடித்தக் கையோடு அதுதொடர்பாக ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். சம்பளம் போதுமானதாக இல்லை, வேலையும் திருப்திகரமாக இல்லை.அச்சமயம் திருவண்ணாமலையில் யோகா, சிலம்பம், ஸ்கேட்டிங் அப்படீன்னு சுரேஷ் சார் ஆரம்பித்தார். தூத்துக்குடியிலும், சென்னையிலும் அவர் பல சாதனையாளர்களை உருவாக்கினது எனக்குத் தெரியவே தெரியாது. நானாக விருப்பப்பட்டு அவரிடம் யோகா பயின்றேன். அப்போதுதான், எலும்புகள் பச்சையாக இருக்கும்போது இந்தக் கலையைப் பயின்றிருந்தால் உடம்பு நன்றாக வளைந்துக் கொடுத்திருக்குமே, இப்போது இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே எனத் திணறினேன். இருந்தும், பயிற்சியில் மும்முரமாக முழுமூச்சுடன் தீவிர அர்ப்பணிப்பு

செலுத்தினேன். போகப்போகத்தான் எனக்குள் தன்னம்பிக்கையும், வைராக்கியமும் உருவெடுத்தது. கலெக்டர்தான் ஆகமுடியவில்லை, கற்றதிலாவது சாதிக்கலாமே எனும் வெறி ஏற்பட்டது.

## சாதனைகளும், விருதுகளும்

தீவிரமாக களம் இறங்கியதில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட விருதுகள் குவிக்க முடிந்தது. குடியரசு தினத்தன்று உள்ளூர் சாதனையாளர் விருதை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் உயர்திரு கந்தசாமி வழங்கினார். தேசிய நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு, தேசிய யோகாப் போட்டியில் 28 வயதிற்குட்பட்ட பிரிவில் முதலிடம், சர்வதேச யோகா போட்டியில் நடுவர் சான்று, சர்வதேசப் பல்கலைக்கழகம் ஒன்றின் சார்பாக ஊட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முனைவர் பட்டம், உலக இளைஞர் தினத்தில் யோகா மற்றும் சிலம்பம் பயிற்சி அளித்த சான்று என விருதுகளின் பட்டியலுக்கு நான் சொந்தக்காரியானேன். சிகரமாக சர்வதேச சாதனையாளர்கள் கவுன்சில் எனக்கு சிறந்த சமூக சேவையாளர் விருது வழங்கியது. கடந்த காலங்களில் யோகா மற்றும் நேச்சுரோபதி பயிற்சிகளை திருவண்ணமலை மற்றும் சுற்றுவட்டாரத்தில் வயது பாரபட்சமின்றி அனைவருக்கும் கற்பித்து வருகிறேன். கூடவே தமிழர் பாரம்பரியக் கலைகளான சிலம்பம், வில்வித்தைகளும், சதுரங்கம் மற்றும் ஸ்கேட்டிங் பயிற்சிகளும் அளித்து வருகிறேன்.

மிஸ்ட்டி என்னும் 12 வயது குழந்தை இரண்டரை நிமிடத்தில் 103 ஆசனங்களை செய்த நிகழ்ச்சி சர்வதேச விருது பெற்றது .இது எனது பயிற்சியில் ஒரு துளியாகும். அதுபோல பத்தாம் வகுப்புப் படிக்கும் கல்வியரசு என்னுடைய மனோதிடப் பயிற்சியால் கறுப்புத் துணியால் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒன்றரைக் கிலோ மீட்டர் ஸ்கேட்டிங் மூலம் உலக சாதனைப் படைத்துள்ளார். மற்றொரு சிறுமி திரித்தி 5வது தான் படிக்கிறாள். மூன்றடுக்குப் பானை மீது அமர்ந்து இருபது நிமிடம் அவள் பத்மாசனம் செய்த சாதனை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதுபோல மாணவர்களின் சாதனைகளைப் பட்டி யிலிட்டுக்கொண்டே போகலாம். எனது சாதனையில், நான் மிகவும் அரிதாகக் கருதுவது 2555 ஆணி கூர்முனைகள் மீது 51 ஆசனங்கள் நிகழ்த்திய பெண் பாலியல் வன்கொடுமை விழிப்புணர்வு நிகழ்ச்சியைப் பாக்கியமாகக் கருதுகிறேன்.

மத்திய அரசின் நேரு யுவகேந்திர இளைஞர் மன்றம் சார்பாக திருவண்ணாமலையில் பெண்கள் நற்பணி மன்றம் தொடங்கி பெண்களுக்கு மனவலிமை, வைராக்கியம், துணிச்சல், தன்னம்பிக்கை போன்றவற்றை ஏற்படுத்தும் நமது பாரம்பரியக் கலைகளான யோகா, சிலம்பம் கற்பித்தலோடு அவர்கள் சொந்தக்காலில்

தங்களை முன்னேற்றிக்கொள்ளும் வகையில் தொழில்முனைவோர்க்கும் பயிற்சிகள் அளித்து, தொழில் தொடங்க ஆலோசனைகள் கூறி நிதி ஏற்பாடும் செய்து தருகிறேன்.

பிட் இந்தியா இயக்கத்தின் மூலமாக சைக்கிள் பேரணி நடத்தி உடல்தகுதி விழிப்புணர்வை மாவட்டத்தில் உருவாக்கியுள்ளேன். தற்போது கொரோனா விழிப்புணர்வுக்காக மாவட்டம் முழுவதும் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் தீவிர விழிப்புணர்வில் ஈடுபட்டுள்ளேன்.

இச்சமயத்தில் நான் மிகவும் அவசியமாகக் கூறவிரும்புவது என்னவென்றால், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழியாக இருந்துவிடக்கூடாது. பாரம்பரிய உணவு வகைகளில் இருந்து நாம் மாறுபட்டு பன்னாட்டு கலாச்சாரம் என்ற பெயரில் நம்மை நாமே நோயாளிகளாக மாற்றிக்கொள்ளும் தவறை செய்து வருகிறோம்.

கொரோனா உள்ளிட்ட கொடிய நோய்களுக்கும் யோகாவில் தீர்வு உண்டு என நான் திடமாக நம்புகிறேன். யோகா உடலுக்கும் மனதுக்கும் உறுதியளித்து ஒருமுகப்படுத்தும் அதி அற்புதக் கலை. இந்தப் பாரம்பரியக்கலையை இன்றைய இளைய சமுதாயம் முழுமூச்சுடன் கற்று உலக அளவில் பரப்ப வேண்டும் என்பதே என் வாழ்வின் பெருங்கனவு.



அதைத்தான் இப்போது செய்து கொண்டுள்ளேன். யோகாவைக் கற்பிக்க இளைய சமுதாயம் எங்கிருந்து அழைப்பு விடுத்தாலும் பயிற்சி அளிக்க ஆர்வமாக உள்ளேன்.

சித்தர்கள் போற்றி மதித்த யோகாவுக்கென தனிப்பயிற்சி நிறுவனம் கூடிய விரைவில் தொடங்கி எனது கனவைக் கண்டிப்பாக நனவாக்குவேன்' என்றார் தன்னம்பிக்கை நாயகி கல்பனா.

## ஆசனங்களும் அதன் பயன்களும்

தனுராசனம், மகாமுத்ரா ஆசனம் தினமும் பத்து நிமிடம் செய்தால், சர்க்கரை அளவு கட்டப்படுத்தும், சுகாசனம், பத்மாசனம், வஜ்ராசனம் போன்ற ஆசனங்கள் பத்து நிமிடம் செய்தால் ரத்த அழுத்தம் குறையும், புஜங்காசனம், மச்சாசனம், ஹர்த சிரசாசனம் போன்ற ஆசனங்கள் பத்து நிமிடம் செய்தால் சுவாச நோய்களும் குணமடைவது உறுதி எனப் பேச்சுவாக்கில் கல்பனா கூறியது நம்மை வியப்பில் ஆழ்த்தியது.

பெரிய செலவின்றி மனதையும் உடலையும் ஒருமுகப்படுத்தி உலக சமுதாயத்தை நல்வழிப்படுத்தக் கருதும் கல்பனாவின் கனவு நனவாக வாழ்த்துவோம்.





# பெண் என்பவள் யார்?

சற்றும் உதவாத சம்பிரதாயங்களுக்கும் சாத்திரங்களுக்கும் ஆண்டாண்டாய் அடிமைப்பட்டவளா?

குடும்பத்தின் பொறுப்புகளாலும் சமூகத்தின் கட்டுப்பாடுகளாலும் அடிமைப் படுத்தப்பட்டவளா? தாய்மையும் மென்மையும் மட்டுமே பெண்மை என்று நம்ப வைக்கப்பட்டவளா?

அழகும் அணிகலனும் வடிவும் வளையலும் பெண்ணுக்கு பெருமை என ஆக்கப்பட்டவளா?

காதலை மறுத்ததால் அமில வீச்சுக்கு ஆளாக்கப்பட்டவளா? கொலையே செய்தாலும் கல்லானாலும் கணவன் என்று பொறுத்துக் கொள்ளத் தூண்டப்படுபவளா? தான் உலகுக்கு கொணர்ந்த இனத்தாலே தன் உறுப்புகளைப் பயன்படுத்தி கீழ்த்தரமாக பேசப்படுபவளா?

கடமைகளுக்கு மத்தியில் கனவு களையும் பொறுப்புகளுக்கு மத்தியில் ஆசைகளையும் துறப்பவளா? சரியாக இருந்தும் சந்தேகக் கண்களால் சாகடிக்கப்பட்டவளா?

பருவம் அடைந்த பின் பள்ளிப் படிப்பை பாதியில் விட்டவளா? உடைகளால் நடத்தை கெட்டவள் என்று முத்திரைக் குத்தப்படுபவளா?

காதலில் எப்போதும் ஏமாற்றுக்காரிகள் என்று விமர்சிக்கப்படுபவளா? விலங்குகளை விட கொடிய காமப் பிசாசுகளின் பிடியில் சிக்குண்ட பின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சி வீட்டிலே முடக்கப்பட்டவளா?

அழுதால் கூட பெட்டை மாதிரி அழாதே என உதாரணத்திற்கு கூட உருக்குலைக்கப்பட்டவளா?

படிப்பும் வேலையும் மறுக்கப்பட்டு வீடும் சமையலும் மட்டுமே உனக்கு பொருத்தம் என்று நரகத்தில் தள்ளப்படுகிறவளா?

நண்பனிடம் சிரித்துப் பேசினாலே கீழ்த்தரமாக கிசுகிசுக்கப்பட்டவளா?

ஆளுமையுடன் நடந்து கொண்டாள் திமிர் பிடித்தவள் என்று தூற்றப்பட்டவளா ?

இருக்கும் போதும் இறக்கும் போதும் பிறரையே நாடியிருப்பவளா?

வரதட்சணைக்காக வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவளா? இரவில் தனியே நடமாட முடியாதவளா ? முப்பத்து மூன்று சதவீதத்துக்குள் ஒடுக்கப்பட்டவளா?

பெண்ணாக இருந்துகொண்டு கேட்கிறேன் யார் தான் பெண்?

எப்படி இருந்தால் தான் பெண்?

ஆணை யாரும் ஆண் இயக்நனர், ஆண் ஓட்டுநர் என்று சொல்லாத போது பெண்ணை மட்டும் ஏன் பெண் இயக்குநர், பெண் ஓட்டுநர் என ஏன் சொல்லவேண்டும்?

நான் ஆண்களைக் குறை கூறவில்லை பெண்ணியம் பேசிய பாரதியும் பெரியாரும் இங்குண்டு. பெண்ணுக்கே கேடு விளைவிக்கும் பெண்ணும் இங்குண்டு. இருபது நூற்றாண்டுகள் கடந்துவிட்டோம் இன்னமும் வலிமை இல்லாதவளாகவே நடத்தப்படுகிறாள்.

அவளைப் பூவாகத் தென்றலாகக் கருதுகிறவர்களுக்குச் சொல்கிறேன். அவள் நெருப்பும் பாறையும் தான் யாவும் கடந்தப்பின்னும் கண்முன் தோன்றி மறையும் கேள்விதனில் சிக்குண்டேன் என் மகளும் என் அம்மா வாழ்ந்த உலகில் வாழ்வாளா? அல்ல அதற்குள் புது உலகம் படைக்கப்படுமா ?

எஸ். எஸ்.புனிதா





# பெண்களுக்கு ஓட்டுரிமை எப்படி கிடைத்தது?

க.பிருந்தா

ஓட்டுரிமை என்பது ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையாகும். ஒரு நாட்டின் மக்களுக்கு தங்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க வாக்கு செலுத்தும் உரிமை வழங்கப்படுவது தான் ஓட்டுரிமை. ஆனால், இந்த முக்கியமான உரிமை ஆரம்ப காலங்களில் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பெண்கள் சமூகத்தில் முக்கிய பங்கு வகித்தாலும், அரசியல் மற்றும் நிர்வாகத்தில் அவர்களுக்கு இடமில்லை. பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைத்தது பல ஆண்டுகளாக நடந்த போராட்டங்களின் விளைவாகும்.

ஆரம்ப காலத்தில் பெண்களின் நிலை பழங்காலம் மற்றும் நடுநிலைக் காலங்களில் பெண்கள் குடும்ப வாழ்க்கைக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டனர். சமூகத்தில் ஆணாதிக்கம் அதிகமாக இருந்ததால், பெண்கள் அரசியலில் பங்கேற்க முடியாது என்ற எண்ணம் நிலவியது.

பெண்களுக்கு கல்வி வாய்ப்புகள் குறைவாக இருந்ததால், அவர்கள் அரசியல் அறிவு இல்லாதவர்கள் என்று கருதப்பட்டனர். இதனால், பெண்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற **French Revolution** உலகளவில் சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

### பெண்களின் போராட்டம் (Women's Suffrage Movement)

19ஆம் நூற்றாண்டில் பெண்கள் தங்களுக்கான உரிமைகளைப் பெற ஒழுங்கான இயக்கங்களைத் தொடங்கினர். 1848ஆம் ஆண்டு

நடைபெற்ற **Seneca Falls Convention** பெண்களின் உரிமை இயக்கத்தில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இந்த இயக்கத்தில் **Susan B. Anthony** மற்றும் **Elizabeth Cady Stanton** போன்ற தலைவர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

பெண்கள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், மனுக்கள், உரைகள் போன்ற பல்வேறு வழிகளில் போராடினர். உலகின் முதல் வெற்றி – நியூசிலாந்து 1893ஆம் ஆண்டு **New Zealand** பெண்களுக்கு முழுமையான ஓட்டுரிமை வழங்கிய முதல் நாடாகும்.

இந்த வெற்றிக்கு காரணமானவர்கள்:

* **Kate Sheppard** – இயக்கத் தலைவர்

* **Richard Seddon** – பிரதமர்

* **David Boyle, 7th Earl of Glasgow** – கையெழுத்திட்டவர்

பிற நாடுகளில் முன்னேற்றம்

நியூசிலாந்தைத் தொடர்ந்து பல நாடுகள் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கின:

* **United Kingdom** – 1918

* **United States** – 1920

இதனால் உலகளவில் பெண்களின் அரசியல் பங்கு அதிகரித்தது.

## இந்தியாவில் பெண்களுக்கு ஓட்டுரிமை

இந்தியாவில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைத்தது ஒரு முக்கியமான சமூக மாற்றமாகும்.

பிரிட்டிஷ் காலம்

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படவில்லை. ஆனால், பெண்கள் அரசியல் விழிப்புணர்வுடன் உரிமை கோரத் தொடங்கினர்.

## பெண்களின் இயக்கம்

இந்திய பெண்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில்

* **Sarojini Naidu**

* **Annie Besant**

முக்கிய பங்கு வகித்தனர்.

அவர்கள் பெண்களின் கல்வி, அரசியல் உரிமை, சமத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தினர்.

சட்ட முன்னேற்றங்கள்

* 1919 – சில பெண்களுக்கு மட்டும் ஓட்டுரிமை

* 1935 – மேலும் விரிவாக்கம் (ஆனால் எல்லோருக்கும் இல்லை)

* இது சொத்து மற்றும் கல்வி அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டது.

## முழுமையான ஓட்டுரிமை

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு,

1950ஆம் ஆண்டு அரசியல் சட்டம் அமலுக்கு வந்தபோது:

* அனைத்து பெண்களுக்கும் சம ஓட்டுரிமை வழங்கப்பட்டது

* எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் உரிமை உறுதி செய்யப்பட்டது

* இது இந்தியாவின் மிகப்பெரிய ஜனநாயக சாதனையாகும்.

தமிழ்நாட்டில் பெண்களின் ஓட்டுரிமை மற்றும் முன்னேற்றம்

தமிழ்நாட்டில் பெண்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றம் ஓட்டுரிமையைச் சிறப்பாக பயன்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது. சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் தலைவர்களின் முயற்சியால் பெண்களுக்கு கல்வி மற்றும் சமத்துவம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்தது.

இன்றைய தமிழ்நாட்டில் பெண்கள் அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பல துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். தேர்தல்களில் பெண்கள் ஆர்வமாக பங்கேற்று தங்கள் ஓட்டுரிமையைப் பயன்படுத்துகின்றனர். மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மூலம் பெண்களின் அரசியல் பங்கு அதிகரித்துள்ளது.

இதனால், தமிழ்நாட்டில் பெண்களின் ஓட்டுரிமை சமூக முன்னேற்றத்திற்கான ஒரு வலிமையான கருவியாக மாறியுள்ளது.

## முடிவு

பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைத்தது ஒரு நாள் நடந்த மாற்றம் அல்ல. அது பல ஆண்டுகளாக நடந்த போராட்டத்தின் விளைவு ஆகும்.

உலகம் முழுவதும் பெண்கள் தங்கள் உரிமைக்காக போராடி வெற்றி பெற்றனர். இன்று பெண்கள் அரசியலில் பங்கேற்று, தலைவர்களாக உயர்ந்து, நாட்டின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது சமத்துவத்தின் மிகப்பெரிய அடையாளமாகும்.

“பெண்களின் ஓட்டுரிமை என்பது அவர்களின் உரிமை மட்டுமல்ல, அவர்களின் சுதந்திரத்தின் அடையாளமாகும்.”





# படித்து முடிக்காத பள்ளிக்கூட நினைவுகள்

எல்லோருக்கும் பள்ளிக்கூட கால நினைவுகள் என்பது மனதில் ஆழமாக பதிந்திருக்கும்.

பல ஆண்டுகளாக நம்முடன் படித்து வரும் மாணவ மாணவிகளுக்கு எத்தனை வயதானாலும் இந்த வகுப்பறையில் பார்த்த விளையாடிய அந்த முகமும் அந்த உருவமும் தான் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும்.

அதிலும் வகுப்பில் லீடர் என்ற பொறுப்பு என்பது முதலமைச்சர் பொறுப்பை விட பெரிதாக எண்ணிய அன்றைய காலகட்டத்தில் வகுப்பாசிரியர் சொல்லும் பணிகளை அடுத்த நொடியே செய்து விட வேண்டும் என்ற பரபரப்பு எப்போதும் என்னை தொற்றிக் கொள்ளும்.

வகுப்பில் நான்கு அன்பான தோழிகள் இருக்கின்றனர். நான் லீடர் என்கின்ற முறையில் அவர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்ய முடிந்தது. கையெழுத்து நோட்டு அடுக்கவில்லையென்றால் ஆசிரியரிடம் சொல்லாமல் இருப்பது. ஆசிரியர்

வகுப்பிற்கு வராதபோது பேசினாலும் அவர்களுடைய பெயரை கரும்பலகையில் எழுதாமல் இருப்பது. இப்படிப்பல சலுகைகளை என்னால் செய்து தர முடிந்தது.

ஒரு நாள் எல்லோருக்கும் மாத்தி ரைகளை வழங்கச் சொல்லி ஆசிரியர் என்னிடம் கொடுத்தார். நான் அதை எல்லோருக்கும் கொடுத்தேன். என்னுடைய தோழிகளுக்கும் நான் அதைக் கொடுத்தேன். மீதம் நிறைய இருந்ததால் ஆசிரியருக்கு தெரியாமல் ஒவ்வொருவருக்கும் நான்கு மூன்று இன்று கொடுத்து விட்டேன்.

மறுநாள் என்னுடைய தோழிகள் நான்கு பேரும் வகுப்பிற்கு வரவில்லை. என்னவென்று காரணமும் புரியவில்லை.

இரண்டு நாள் கழித்து ஒவ்வொரு வராக வரத் தொடங்கினர். ஏன் வரவில்லை என்று நான் கேட்டதற்கு ஒரே வயிற்றுப்போக்கு என்றனர். ஒவ்வொருவரும் சொல்லிவிட்டு நால்வரும் ஒருவரை ஒருவர் முகத்தை பார்த்துக் கொண்டனர்.

ஆசிரியர் கேட்டார் ஏன் நால்வரும் ஒரே நேரத்தில் விடுப்பு எடுத்தீர்கள் என்று. எல்லோரும் ஒரே காரணத்தை சொன்னார்கள்.

ஆசிரியருக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் அவர்கள் சோர்வாக இருந்தால் சற்றே ஐயம் ஏற்பட்டுவிட்டது.

ஆசிரியர் சொன்னார் நான் கொடுத்த மாத்திரைகள் எல்லாம் இரவில் எல்லோரும் சாப்பிட்டீர்களா? என்று கேட்டார். இந்த மாத்திரை எதற்காக தெரியுமா? என்று கேட்டார்.

யாருக்கும் பதில் தெரியவில்லை. இந்த மாத்திரை உடலை, குடலை சுத்தம் செய்யும் மாத்திரை. மாதம் ஒரு முறை தவறாமல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். எனக்கு அப்போது தான் புரிந்தது.

அதிர்ச்சியும் பயமும் கலந்த முகத்துடன் ஆசிரியர் முன் சென்று டீச்சர் எத்தனை மாத்திரை சாப்பிட வேண்டும் என்றேன்.

ஏன் .. ஒன்னு தான் சாப்பிடணும் என்றார்.

ரெண்டு சாப்பிடலாமா டீச்சர் என்று கேட்டதற்கு நிமிர்ந்து பார்த்தார்.

நீ எத்தனை சாப்பிட்ட. நான் ஒன்னு தான் டீச்சர் சாப்ட்டேன் .

என் பிரண்ட்ஸ்க்கு தான் ஆளுக்கு மூணு நாலுனு குடுத்துட்டேன் என்றேன்.

ஆசிரியர் பதறிப் போனார். ஆசிரியரின் கவனம் முழுவதும் என் தோழிகளின் பக்கம் திரும்பியது.

உன்கிட்ட மாத்தரை கொடுக்க சொல்லிக் குடுத்ததுக்கு என் வேலைக்கு வேட்டுவச்சிட்டயே. உன்னோட உயிர்த்தோழிகள என்ன பன்னிருக்க பாத்தியா.? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

பாசத்தைக்கூட சரியான முறையில் சரியான வழியில் காட்டணும் என்று என்னுடையவகுப்பாசிரியர் சொன்னது இன்றும் என் நினைவில் நீங்காத இடத்தை பெற்றுள்ளது



- கௌதமி




# உணவே மருந்து

கோயம்புத்தூர் பாப்பம்பட்டியில் அமைந்துள்ள மாயோனி ஞானவொளி பீடமும், போகர் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்திய உலக சுகாதார நாள் விழாவில் இயற்கை மருத்துவர் நிவேதிதா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். மனிதர்களின் உடலமைப்பானது தன்னைத் தானே சரிசெய்து கொள்ளும் படியான வகையில் அமைந்துள்ளது.

மருந்தென்று உடலுக்குத் தேவையில்லை. உடலை உள்ளும் புறமும் தூய்மையாக வைத்துக் கொண்டால் போதும். சின்ன நோய்களுக்காக மருத்துமனைகளுக்குச் செல்ல வேண்டாம். நீங்கள் பொறுமை காத்தால் உடல் தன்னைத்தானே சரிசெய்துகொள்ளும் என்று கூறினார்.

தலைமையுரை ஆற்றிய திரு மாயோனி அம்மா அவர்கள் கூறியதாவது, ஒவ்வொருவருக்கும் உடலைப் பற்றிய அறிவு என்பது மிகவும் அவசியம். விரும்பிய உணவையெல்லாம் உண்ணாமல் உடலுக்கு எது எது தேவையோ அவற்றைத் தவறாமல் எடுத்துக்கொள்ளவேண்டும். யோகா, தியானம், ஊட்டச்சத்து என்பது மனித உடலுக்கு மிகவும் அவசியம் என்று பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.நிகழ்வில் பயிற்சி மருத்துவர்கள் ரபீக் மற்றும் அனுசுயா கலந்து கொண்டனர். பேராசிரியர் முனைவர் கிருஷ்ணபாரதி, மாரிமுத்து, பிரகாஷ், முத்து,ரேணுகாசிவக்குமார், சிவராம்கணேசன், சிந்து, சுமதி, சரண்யா, பூபதி, கிருஷ்ணவேணி, சரண் ஹரிசங்கர், ஈஸ்வரி, கவுதமி, சிவகுமார், சுலோச்சனா, சரஸ்வதி ஆகியோர் கலந்துகொண்டனர் .

மாயோனி ஞானவொளி பீடத்தின் செயலர் ப.கோவிந்தராஜ் பொருளாளர் சு.இராமமூர்த்தி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.



## அகத்தியாவின்
## கவிதைப்பக்கம்

### விளக்காவதும் ஒளியாவதும்

குருவிடமிருந்து கற்றுத்
தேருகின்றபோது வலியின்றி
வழிகாண இயலாது.

விளக்கின் சுடரைப்போல அதன்
ஒளி சுடுவதில்லை.

### கடைசித்துளி

ஒரு கதவு எப்போதும்
திறந்தே இருக்கட்டும்

பானையில் ஒருபிடிசோறு
எப்போதும் மீதமிருக்கட்டும்

கடைசி ஒருதாள் எதும்
எழுதாமல் இருக்கட்டும்.

அன்பைப் பேணும் அந்தக்
கடைசிச் சொல் மீதமிருக்கட்டும்.

### நகரும் படிக்கட்டுகள்

வானத்தை வளைத்தார்கள்
வானவில்லைப் புதிதாக
உருவாக்கினார்கள்

மலைகளை வாங்கினார்கள்
அருவிகளையும் கூட
வாங்கினார்கள்

அனைத்தையும் வாங்கிய
பின்பு எல்லோரையும்
பயமுறுத்தினார்கள்

ஆனால் அவர்களின் வயதை
மட்டும் ஒன்றும் செய்ய
முடியவில்லை.




KURINJI YAZH SCHOOL OF MUSIC
The Sound of Inspiration
SUMMER EXCELLENCE
PACKAGES 2026
UNLOCK YOUR MUSIC POTENTIAL
COURSES OFFERED!
Carnatic Music
Devotional Songs & Bhajans
Cine Songs Training
Veena & Violin Classes
SPECIAL TRAINING FOR
AUDITIONS
CONCERTS & STAGE
PERFORMANCES
TV SHOWS
CINE SONGS
WHY CHOOSE US?
✓Excellence-Based Learning Packages
✓Highly Qualified & Experienced Faculty
✓Personalized Training & Voice Grooming
✓Classical & Light Music Specialization
✓Stage Confidence & Performance Training
LIMITED SEATS AVAILABLE
ADDRESS:
7/2, Vasu Lane, Kilpauk, Chennai - 600010
FOR REGISTRATION
CONTACT:
9500312370, 9025848758
FACULTY:
Dr. Subhaselvi M.A., M.A., Ph.D
(Mass Media)
Dr. Krishna Bharathi
M.A., M.Phil., Ph.D (Carnatic Music)


BLUE MOUNT
Find Your Dream Land Today!
Farm, House, Land, DTCP Approved Plots in Prime Location
Bank Loan Available
Ready to Build Plots
Limited Plots Available
BLUE MOUNT
HOUSING & REAL ESTATES
CALL NOW FOR SITE VISIT : 9047346777
No: 07, Easwaran koil Street, Near Kalaignar Engg College, Pallapalayam,
Coimbatore 641402.